Computer Programing
Basic Language
செவ்வாய், வியாழன்
வகுப்புக்கள் ஆரம்பம்
7 - 6 - 90 10.30 மணி
Fees மாதம் ரூ. 300
SCHOOL OF BUSINESS
ADMINISTRATION
16, 3rd Cross Street
JAFFNA

பக்கங்கள் எட்டு விலை ரூபா:- 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 119 திங்கள் 04 06-[illegible] (வைகாசி 21) துல்ஹஜ்ஜ் 10

ஆரம்பமாகின்றன!
C. I. M.A., A. A. T.,
I.A.B. மற்றும் I.D.P.M.
வகுப்புக்கள்
for Further Details
School of Business
Administration
16, 3rd Cross Street
JAFFNA

# மாகாண தேர்தலின் பின்னரே பாதுகாப்பு பிரச்சனைக்கு தீர்வு

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் ஓர் நீதியான தேர்தல் நடைபெற்ற பின்னரே இப்பகுதியில் பாதுகாப்புநிலைமைகள் பற்றிய பலபிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியும் என விடுதலைப்புலிகள் முப்படைத் தளபதிகளுடனான பேச்சுகளின் போது வலியுறுத்தினர்.

நேற்று முன்தினம் கொழும்பு உயர்கல்வி அமைச்சில் விடுதலைப்புலிகளின் தூதுக்குழுவிற்கும் முப்படைத் தளபதிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. பேச்சுகளின் போது வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பாதுகாப்புப்படையினர் எதிர்நோக்கும் பிரச்சனைகள் குறித்து பிராஸ்தாபிக்கப்பட்டது. தமிழ்ப்பகுதியில் நிலவும் அரசியல் சூனியநிலை நீக்கப்படுமானால் அநேகமான பிரச்சனைக்கு தீர்வு காணக்கூடியதாக இருக்கும் என அப்போது விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவித்

— 8 ஆம் பக்கம் பார்க்க

யாழ் பல்கலைக்கழகத்தில்

## மின் தடையை தவிர்க்க மூன்று புதிய ஜெனரேற்றர்கள்

யாழ் பல்கலைக்கழகத்தில் மின்சாரத் தடைப் பாதிப்பை தவிர்ப்பதற்காக 3 ஜெனரேற்றர்கள் வாங்கப்படவுள்ளது.

யாழ் பல்கலைக் கழகததில மின்சாரத்தையே அவசியமாகக் கொண்டுள்ள சாதனங்கள் பயிற்சிகள் என்பன கடந்த காலங்களில் மின்சாரத் தடையின் போது பாதிக்கப்

—08ஆம் பக்கம் பார்க்க

## புனர் வாழ்வு வேலைகளில் முல்லைத்தீவு முன்னணியில்

தமிழ் மாவட்டங்களில் புனர் நிர்மாண புனர் வாழ்வு வேலைகளில் முல்லைத்தீவு மாவட்டமே முன்னணி வகிப்பதாக அரசாங்கம் மதிப்பீடு செய்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் அதிக புனர்வாழ்வு வேலைகளை செய்துள்ளதால்

—8 ஆம் பக்கம் பார்க்க

சர்வோதயம் மூலமான உதவி

## கிளிநொச்சி, யாழ்.மாவட்ட குடும்பங்களுக்கு வீடுகள்!

கடந்த கால அசம்பாவிதங்கள் வன்செயல்களின் போது கிளிநொச்சி மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களில் 100 குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளில் சர்வோதய இயக்கம் ஈடுபட்டுள்ளதாக அதன் வடபிராந்திய வெளிக்கள இயக்குநர் திரு.கி.சிவசுப்பிரமணியம் தெரிவித்தார்.

இதே போன்று யாழ் மாவட்டத்தில் கரவெட்டி, தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் ஆகிய மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் முதல் கட்டமாகத் தலா 25 வீடுகள் வீதம் 75

— 8 ஆம் பக்கம் பார்க்க

## முரசொலிக்கு வந்த கடிதம்

### ஓட்டம் பிடித்த வண்டவாளம் நடத்துனரால் அம்பலம்

ஆசிரியர்
முரசொலி.

01-06-1990 காலை யாழ்ப்பாணத்திலிருந்து துணுக்காய் நோக்கிச் சென்றுகொண்டிருந்த 29[8894 இலக்க பேரூந்து வண்டியில் நான் நடத்துனராக கடமை செய்து கொண்டிருந்த போது கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தின் முன்னால் பேரூந்து வண்டி தடுக்கப்பட்டது. தங்களைப் புத்திசாலிகள் என இனம் காட்டிக்கொண்ட சில இளைஞர், யுவதிகள் பேரூந்து வண்டியினுள் ஏறி மிகவும் பின் தங்கிய கிராம மக்களுக்காக அனுப்பி வைக்கப்பட்ட முரசொலிப் பத்திரிகையை எதுவித அனுமதியுமின்றி இறக்கிக் கொண்டு ஓட்டம் எடுத்தனர். நான் அவர்களைத் துரத்திச் சென்று வினாவியபோது நாம் பல்கலைக்கழக புதுமுக மாணவர்கள் என்று இனம் காட்டிக் கொண்டனர். தமக்கும் குறிப்பிட்ட பத்திரிகை நிறுவனத்திற்கும் இடையிலான பத்திரிகைச் செய்தி முரண்பாடு காரணமாக களவெடுத்துச் செல்கிறோம். இதில் நீர் தலையிட்டால் பாரிய விளைவுகள் ஏற்படும் என்றும் மிரட்டினார்கள். இவ்வாறு இவர்கள் பத்திரிகைச் சுதந்திரத்திற்கும், எமது கடமைக்கும் இடையூறு விளைவித்துள்ளனர். இனிமேலாவது குறிப்பிட்டவர்கள் திரு; தி நடக்க முயற்சி எடுப்பார்களா? பொறுத்திருந்து பார்ப்போம்.

ச. கணேஸ்வரன்
கிளிநொச்சி பஸ் டிப்போ நடத்துனர்.

குறிப்பு:—

கடந்த முதலாம் திகதி முரசொலியின் பிரதிகளை கிளிநொச்சியில் வைத்து தீக்கிரையாக்கிய கும்பல் பற்றி முரசொலி வாசகர்கள் பலர் எமக்குத் தகவல்களைத்தந்து தமது கண்டனத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்கள். அத்துடன் உண்மைகளை வெளிப்படுத்தும் இத்தகைய 'நேரடி றிப்போட்' முரசொலியில் தொடர்ந்து இடம்பெற வேண்டுமெனவும் அவர்கள் கேட்டுள்ளனர். இந்த வகையில் நடத்துனர் கணேஸ்வரனுக்கும், மற்றையவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆ—ர்

வடக்கு கிழக்குப் பகுதிகளில்

## சேதமடைந்த ஆலயங்கள் திருத்த நிதி வழங்க அரசு மறுப்பு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சேதமாக்கப்பட்ட ஆலயங்களைத் திருத்துவதற்கு நிதி ஒதுக்க முடியாதென மத்திய அரசு கை விரித்துள்ளது,

இதனால் இந்து சமய விவகார அமைச்சு பெரும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வன் செயலினால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்ட 611 ஆலயங்களைத் திருத்துவதற்கு தேவையான 25 கோடி ரூபாவை வழங்குமாறு புனர் வாழ்வு அமைச்சிடம் கேட்கப்பட்ட போது நிதி உதவி வழங்க முடியாத நிலையில் அமைச்சு இருப்பதாக அறிவித்துள்ளது.

வெளிநாட்டு நிதி நிறுவனங்களும் ஆலயங்களின் புனரமைப்புக்கு நிதி உதவி வழங்க

—08 ஆம் பக்கம் பார்க்க

## விடுதலைப்புலிகள் அரசு பேச்சு மாவட்ட மட்டத்திற்கும்விரிவு

விடுதலைப்புலிகளுக்கும் பாதுகாப்புப்படை அதிகாரிகளுக்கும் இடையில் மாவட்ட மட்டத்தில் பேச்சுகள் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளுக்கும் முப்படைத் தளபதிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுகளின் போது இம்முடிவு எடுக்கப்பட்டது.

இவ்வாறு மாவட்ட மட்டங்களில் பேச்சுகள் நடாத்

— 8 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் பல்கலைக்கழகத்தில் தீயணைப்பு கருவிப்பிரிவு இயங்கும்

யாழ் பல்கலைக்கழகத்தில் தீயணைக்கும் கருவிகளை இணைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

யாழ் பல்கலைக்கழகம் தீயணைக்கும் கருவிப் பிரிவை உருவாக்குவதற்குத் தேவையான உபகரணங்களை விலை கொடுத்து வாங்கி மாநகர சபை தீயணைக்கும் பிரிவினரிடம் ஒப்படைக்கவுள்ளது.

—08ஆம் பக்கம் பார்க்க

## கோண்டாவில் முகாமிற்கு

வலிகாமம் பகுதியில் ஆயுதக் குழுக்களினால் கொலை செய்யப்பட்டவர்களின் குடும்பத்தினரோ அல்லது உறவினரோ கொல்லப்பட்டவர் தொடர்பான மரண அத்தாட்சிப் பத்திரம் இருப்பின் அவற்றுடன் இன்று கோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலகத்திற்குச் சமுகம் அளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்.

வடக்குக்கிழக்குப்பகுதிக்கு

## 66விளையாட்டு அலுவலர் தேவை இருப்பதோ 26 மட்டுமே.

வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு 66 விளையாட்டு உத்தியோகத்தர்கள் இருக்கவேண்டும். ஆனால் 26 பேர் மட்டுமே உள்ளனர்.

இப்படி இருந்தால் நாம் எப்படி முன்னேறுவது என கவலை தெரிவித்தார் வட-கிழக்கு மாகாணவிளையாட்டு

... 8 ஆம் பக்கம் பார்க்க

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## பொன்னுத்துரை வாமதேவன்

மலர்வு 18. 12. 1964 — உதிர்வு 17. 5. 1989

திதி- 4. 6. 1990

ஆண்டு ஒன்று சென்றாலும்
மாறாத நினைவுடனே வாழுகின்றோம்
நாம் இங்கே. உனது மருமக்கள்
உனை உணருமுன்னே மறைந்து
விட்டாய் மாமா நீ!
அன்பெனும் தீபத்தாலும் ஆசையெனும்
பூசையாலும் என்றும் நாம்
ஆராதிப்போம் உனையே.

ஆவரங்கால்,
புத்தூர்.

அம்மா, ஐயா, அண்ணன், தம்பி
அக்காமார், மைத்துனர், மருமக்கள்
அன்பு நண்பர்கள்.

06031


## தெல்லிப்பழையில் மாபெரும் கலைவிழா

(சித்தன்கேணி)

தெல்லிப்பழை அம்பனைக் கொத்தணிப் பாடசாலைகளின் நிதிக்காக அம்பனைக் கொத்தணி அமைப்பு நடாத்தும் மாபெரும் கலைவிழா ஒன்று இம்மாதம் 20ம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

அம்பனைக் கொத்தணியின் மூலாதாரப் பாடசாலையான தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் திறந்த வெளியரங்கில் இம்மாபெரும் கலைவிழாவைக் நடாத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் கலைவிழாக் குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

அம்பனைக் கொத்தணிப் பிரிவுக்குட்பட்ட சகல பாடசாலைகளினதும் கலை நிகழ்ச்சிகள் இவ்விழாவில் இடம் பெறவுள்ளன. (12 கி)

## கப்டன் வரதப்பா நினைவாக...

கடந்த வருடம் ஏப்ரல் 30ம் திகதி இந்திய இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் வீர மரணம் அடைந்த கப்டன் வரதப்பா (சீவரத்தினம் சிறிபாஸ்கரன் தையிட்டி) வின் தியாகத்தை நினைவு கூரும் முகமாக, அஞ்சலி கூட்டமும் உருவப்படத் திரை நீக்கமும் இன்று 4-ம் திகதி மாலை தையிட்டி கலைமகள் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் தமிழீழ விடுதலை புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் பலரும் உரையாற்றுவார்கள் அதனை தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (கி

## அன்பளிப்பு

லயன்ஸ் கழகப் பிரதேசத் தலைவர் லயன் பத்மநாதனால் வழங்கப்பட்ட மாக்கிசூப் கட்டிகள் மானிப்பாய் நவாலி தவிர்ந்த ஒன்பது கொத்தணிகளிலுள்ள ஆரம்பப் பாடசாலைகளுக்குத் தலா 1600 சூப்கட்டிகள் வீதம் மருதனாமடம் கோட்டக்கல்வி அலுவலகத்தினால் விநியோகிக்கப் பட்டுள்ளது, (ப-2 கி)


# தொழிற் பயிற்சிகள்

★ **Airconditioning & Refrigeration**

நீண்ட கால இடைவெளிக்குப் பின் மீண்டும் யாழ்நகரில் இவ்வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. மத்திய கிழக்கு நாடுகளில் வேலைசெய்வதற்கு ஏற்றவாறு செய்முறைப்பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

★ **Spoken English**

ஒருமாத முழுநேர வகுப்பும் சனி, ஞாயிறு மாலை நேர வகுப்புக்களும் நடைபெறும்.
அச்சடித்த பாடக்குறிப்பு இலவசமாகவழங்கப்படும்

★ **றேடியோ ரெலிவிசன், வீடியோடெக் றிப்பியறிங்**

ரெலிவிசன், வீடியோ, டெக், றேடியோ திருத்தப்படும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.

காலம்:— 4 மாதம்

★ **றீவைண்டிங்**

ரான்ஸ்போமர், மின்மோட்டர், மின் விசிறி, ஆமேச்சர் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.

காலம்:- 4 மாதம்

★ **எலக்ரிக்கல் வயறிங்**

வீட்டு மின்சார வேலை, மின்சாரப் பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.

காலம்:- 2 மாதம்

மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம்:
6.6.90 (கிழமை நாட்கள்)
9.6.90 (சனி, ஞாயிறு)

## JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ரெயில்வே கடவையருகாமை)

06013



பிரயாணம்! பிரயாணம்!! பிரயாணம்!!!

# "M" THREE TRAVELS

## வழங்கும் சவூதிஅரேபியா, மாலைதீவு பிரயாணங்கள்

★ சவூதி அரேபியா (Saudi Arabia)

| | Vacancy | Salary | |
|---|---|---|---|
| 1. Supervisor | 4 | 650 | SR |
| 2. Forman | 6 | 950 | " |
| 3. Driver | 5 | 550 | " |
| 4. Labourers | 175 | 350 | " |
| 5. Cleaners | 60 | 350 | " |
| 6. ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர்கள்-பெண்கள் (Hospital Cleaners - Ladies only) | வெற்றிடம் 10 | | |
| 7. வீட்டுப்பணிப் பெண்கள் (House Maids) | வெற்றிடம் 10 | | |
| 8. வீட்டுச் சாரதி (House Drivers) | வெற்றிடம் 05 | | |

மாலைதீவு [Maldives]

| | | | |
|---|---|---|---|
| 1. Architect Assistant | 1 | 200—250 | U. S. D. |
| 2. Carpenters | 3 | 150—200 | " |
| 3. Masons | 10 | 150—200 | " |
| 4. Draftsman (சம்பளம் (நேர்முகப்பரீட்சையில் தீர்மானிக்கப்படும்) | 2 | | |
| 5. Plumbers | 2 | 150—200 | " |
| 6. Welders | 10 | 250—300 | " |
| 7. Diesel Petrol Mechanics | 5 | 250—300 | " |
| 8. Computer Operator | 1 | 350 | " |

★ நேர்முகப் பரீட்சை கொழும்பில் (Colombo) விரைவில் நடைபெறும்.

★ எமது நிறுவனம் மூலம் சென்றவாரம் பிரயாணம் செய்தவர்களுடைய அடையாள அட்டைகள் எமது காரியாலயத்திலுள்ளன. உறவினர்கள் வந்து பெற்றுக் கொள்ளவும்.

★ PASSPORT, BOND என்பன குறுகிய காலத்தில் செய்துகொடுக்கப்படும்.

★ நம்பிக்கை நாணயம் என்பவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

## "M" Three Travels

தலைமை அலுவலகம்
"இந்திர பவனம்"
சோதி வீதி,
காங்கேசன்துறை

கிளை அலுவலகம்
இல. 1, 2ஆவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

06030



## யாழ் மாநகராட்சி மன்றம்

# கூறு விலைகள்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்களுக்கான கூறுவிலைகள் என்னால் எதிர்வரும் 11.06.1990ஆம் திகதி பி.ப. 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கூறுவிலை சமர்ப்பிப்போர் அப்பொருள்களை கட்டளை கிடைக்கப்பட்ட திகதியில் இருந்து ஏழு தினங்களுள் சபைக்கு விநியோகித்தல் வேண்டும். கூறுவிலைகள் யாவும் அரக்கு முத்திரை இடப்பட்ட உறையினுள் உள்ளடக்கி உறையின் இடது பக்க மூலையில் "கூறுவிலை எஸ் / சி / ஜீ / 2 / 90. கட்டடப் பொருள்கள்" எனக் குறிப்பிட்டு மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

### பொருள் விபரம்

1. எனாமல் பெயின்ற் 4 லீட்டர் ரின் — (கறுப்பு, சிவப்பு, நீலம், மஞ்சள், பச்சை, பிறவுண், ஓவ் வெள்ளை பட்டர் நிறங்கள்)... மொத்தம் 46 ரின்கள்...
2. எமல்சன் பெயின்ற் 4 லீட்டர் ரின் — ஓவ் வெள்ளை — 180 ரின்; பட்டர் கலர் — 180 ரின்
3. நிலத்தில் பதிக்கும் கல்கள்...20×20 செ.மீ. — 8×8 அங்குலம்
   Floor Tiles (20cm×20cm) 8''×8'' — 2700 எண்...
4. நிலத்தில் பதிக்கும் கல்கள்... $4\frac{1}{2}\times4\frac{1}{2}$ அங்குலம் ... 36000 எண்...
   Wall Tiles ($4\frac{1}{2}''\times4\frac{1}{2}''$)
5. WASH BASIN - VICTORY MAKE with Pedestal Victory 2 Nos. English Taps — 10 Nos
6. COMMODE WITH WHITE SEAT COVER with English CISTERN — 04 Nos
7. SQUATTING PANS WITH FOOT REST-INDIAN — 11 Nos
8. PEDESTAL URINAL — 12 Nos

வி. பி. பாலசிங்கம்
ஆணையாளர்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
01.06.90

06029

**இதயநாதம்**

திங்கட்கிழமை 04-06-1990

நல்வாக்கு

*பிறர் உள்ளம் அறிந்து நடப்பது ஓர் அரிய கலை. பெண்ணுக்கு அது கட்டாயம் வேண்டும்.*

— மு. வ.

*ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்*

# நாவற்குழி வீடுகள் வீடற்றவர்க்கு கிடைக்குமா?

ஐக்கிய தேசியக் கட்சியின் பன்னிரெண்டு வருட ஆட்சிக் காலத்தில் ஸ்ரீலங்காவில் துரிதமாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில் மிக முக்கியமாக அமைந்தது வீடமைப்புத்திட்டமாகும்,

நாடளாவிய ரீதியில் வீடமைப்பு வேலைகளை மிக முன்னுரிமை கொடுத்து அரசாங்கம் செய்வதற்கு ஆரம்பத்திலிருந்தே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ஒரு தனி மனித வாழ்விலும் சரி, சமூக அமைப்பிலும் சரி உணவு, உடை ஆகியவைகளுக்கு அடுத்ததாக உறையுள் இடம் பெறுகின்றது.

ஆகக்குறைந்தது தமக்கென ஒரு சிறுகுடிசை கூடச் சொந்தமாக இல்லாதவன் வாழ்க்கை 'பரதேசி' நிலைக்குச் சமனானது.

கொழும்பு மாநகரிலும், அதனைச்சுற்றியுள்ள பெரும்பாகப்பிரிவிலும் அமைக்கப்பெற்ற அரசாங்க மாடி மனைகளும், நவீன வசதி கொண்ட தனித்தனி வீடுகளும் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளன.

மாவட்ட அடிப்படையிலும் தொகுதி ரீதியாகவும் கிராமசேவைகள் பிரிவு மட்டத்திலும் சிறு, சிறு வீடுகளை அமைக்கும் வேலைகள் மேற்கொள்ளப் பட்டதனால் வறுமைக்கோட்டுக்குக்கீழே வாழ்ந்த குடும்பங்கள் நன்மை பெற முடிந்தது.

இதனைத்தவிர, தொகுதிகள் தோறும் உருவான மாதிரிக் கிராமங்கள் பலநூறாகும்.

ஒவ்வோராண்டும் இம் மாதத்தில் ஜனாதிபதியின் பிறந்தநாளை முன்னிட்டு கிராமோதய வாரம் கொண்டாடப்படும் வேளையில் ஆயிரக் கணக்கில் வீடுகள் அமைக்கப்படுவதுண்டு.

அரசாங்கத்தின் பன்னிரெண்டாண்டு வீடமைப்புச் சாதனைபற்றி நாம் மேலே குறிப்பிட்டவை அனைத்தும் தமிழர் பிரதேசங்கள் என்று புவியியல் ரீதியாக கோடிடப்பட்ட பகுதிக்ள் தவிர்ந்த மற்றைய பகுதிகளிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உடுப்பிட்டித் தொகுதியில் அமைக்கப்பட்ட மாதிரிக் கிராமமொன்றைத்தவிர இங்கு மற்றெந்தத் தொகுதியிலும் மாதிரிக்கிராமம் அமைக்கப்படவில்லை.

இதற்குப் பல்வேறு காரணங்களை அரச தரப்பினர் கூறலாம்.

நாவற்குழியில் பாரிய வீடமைப்புத் திட்டமொன்று உருவாக்கப்பட்டது.

சுமார் இருநூறுக்கும் அதிகமான வீடுகள் இங்கு கட்டி முடிக்கப்பட்டனவாயினும் என்ன காரணத்தினாலோ அவை பொது மக்களுக்கு வழங்கப்படவில்லை.

ஏறத்தாழ எட்டு ஆண்டுகளுக்கு மேலாக இவை பூட்டப்பட்டே கிடந்து இப்போது உடனடிப் பாவனைக்கு உதவாதவையாக இவை மாறியுள்ளன.

இவைகளையெல்லாம் நாம் இங்கு மீள நினைத்து சுட்டிகாட்டுவதற்கு முக்கியமான ஒரு காரணம் உண்டு.

வீடமைப்புத்திட்டங்கள், மாதிரிக் கிராமங்களில் தமிழர் பிரதேசம் புறக்கணிக்கப்பட்ட அதே காலப் பகுதியில் இங்கு நூற்றுக் கணக்கான வீடுகளும் கட்டிடங்களும் இடிக்கப்பட்டு நொருக்கப்பட்டு தகர்க்கப் பட்டுள்ளன.

போர்க்களமாகவிருந்த இப்பிரதேசத்தில் மனித உயிர் இழப்புகளுக்கு அடுத்ததாக வீடுகள் அழிக்கப்பட்டதிலேயே முன்னுரிமை வழங்கப்பட்டது என்பதை புள்ளி விபரங்கள் எடுத்துக் கூறும்.

இந்த நிலையை மனதில் கொண்டு இங்குள்ள ஒவ்வொரு கிராமத்திலும் வீடமைப்புத்திட்டங்கள் உடனடியாக மேற் கொள்ளப் படல் வேண்டும்.

நாவற்குழி வீடமைப்புத் திட்டத்திலுள்ள வீடுகள் முற்றாக அழிவதற்கு முன்னர் அவற்றை திருத்தம் செய்து வீடற்றவர்களுக்கு நீதியானமுறையில் வழங்கப்பட வேண்டும்.

# காக்கை தீவிலிருந்து பூம்புகார் வரை

# யாழ். கரையோரப் பகுதியின் இன்றையநிலை

**யாழ். கரையோரப் பகுதி குடியிருப்புக்கள் பற்றி பல்கலைக்கழக புவியியல் துறை மாணவர்கள் சில மாதங்களுக்கு முன்னர் வெளிக்கள ஆய்வினை மேற்கொண்டனர். இந்த ஆய்வின்போது பெறப்பட்ட பல புள்ளி விபரங்கள் யாழ். கரையோரப் பகுதியின் இன்றைய நிலையை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. இதுபற்றி யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறைப் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை எழுதிய கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.**

பேராசிரியர்
பொ. பாலசுந்தரம்பிள்ளை

மக்கள் நகர்களில் சமூக— பொருளாதார ரீதியில் பிரிந்து குறிப்பிட்ட பரப்புகளில் வாழுதல் பொதுவானதொரு பண்பாகும். சர்வதேச ரீதியாக அண்மைக்காலங்களில் கிராமப் பகுதிகளில் இருந்து மக்கள் நகரங்களை நோக்கி இடம் பெயர்வதாலும், இயற்கை அதிகரிப்பாலும் நகரங்களின் குடிசனத் தொகை துரிதமாக அதிகரித்து வரும் பண்பு பல நாடுகளில் காணப்படுகின்றது.

கிராமிய மக்களின் நகர் நோக்கிய இடப் பெயர்வுடன் நகராக்க செய்முறையால் கூட்டுக் குடும்ப முறை குலைந்து வருவதும் தனித்த குடும்பங்கள் தனியாள் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், நிலத் தேவையும் பல்தன்மை கொண்ட வீட்டுத் தேவைகளும் அதிகரித்துள்ளன. இத்தகைய அதிகரித்து வரும் தேவைகளைப் பெரும்பாலான நகரங்கள் பூர்த்திசெய்ய முடியாதுஉள்ளதுடன் வீட்டுவசதி அளித்தல் பெரும் சவாலாக அமைந்துள்ளது.

நகரங்களுக்குப் புதிதாக இடம்பெயர்வோரில் கூடிய பங்கினர் நலிந்த பிரிவினர். போதிய வளம் இல்லாது வருவதால் இவர்கள் நகரில் தகுதியான வீட்டுவசதியையோ வேலை வாய்ப்பையோ, பெறமுடியாது பல வழிகளிலும் அல்லற்பட்டு போராட்டம் நிறைந்த கடின வாழ்க்கை வாழ்வதைப் பல 3-ம் உலக நாடுகளின் நகர்களில் காணமுடிகின்றது. இத்தகைய நலிந்த பிரிவினர் வாழும் பரப்புக்கள் நகரில் பழைய, பாழ்அடைந்த அல்லது தரக்குறைவானவையாக இருக்கின்றன.

மேலும் வாழிடப் பரப்புக்கள் சேரிகளாகவோ அடர்த்தியான குடியிருப்புக்களாகவோ இருப்பதனையும் காணலாம். இத்தகைய வாழிடப் பரப்புக்கள் காலத்திற்குக் காலம் வெள்ளப்பெருக்கு, தீ மற்றும் இயற்கை அழிவுகளால் கூடுதலாகப் பாதிக்கப்படுவதுடன் தொற்றுநோய் மற்றும் சமூக குற்றங்கள் கூடுதலாக நிகழும் இடங்களாகவும் திகழ்கின்றன.

பெரிய யாழ்ப்பாணம் இன்று 2 லட்சம் மக்களைக் கொண்ட நகராகத் திகழ்கின்றது. இந் நகரின் பொருளாதார அமைப்பில் கைத்தொழில் வருமானம் அதிகளவு இடம்பெறாது சேவைத் தொழில் மூலமும், வெளி இடங்களில் இருந்தும் கிடைக்கும் வருமானமும் முக்கியம் பெறுகின்றன. எனினும், நகரின் கரையோரப் பகுதி 4 பிரதான பாரம்பரிய மீன்பிடிக் குடியிருப்புக்களையும், பல சிறு மீன்பிடிக் குடியிருப்புக்களையும் கொண்டுள்ளது.

ஒப்பீட்டு ரீதியில் இக் கரையோரப் பகுதி நலிந்த பிரிவினரைக்கொண்டு காணப்படுகின்றது. இப்பகுதியிவ் மீன்பிடி சமூகத்தவருடன், நகரில் முறைசாராத் தொழிலில் ஈடுபட்டுள்ள நலிந்த பிரிவினரும் கூடுதலாக வாழ்வதனைக் காணலாம்.

நகரில் நீண்ட காலமாக சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதும் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கு உட்பட்டதுமான பெரிய அபிவிருத்தி நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. ஆயிரத்தித் தொழாயிரத்தி எண்பதில் இருந்து நகரில் நிகழ்ந்த அனர்த்தங்களால் நகர் கட்டிடங்கள் குறிப்பாகக் கோட்டையைச் சுற்றியுள்ள பரப்பு பெரிதும் பாதிக்கப்பட்டது.

மேலும் இக்காலப் பகுதியில் நகரின் நலிந்த பிரிவினரும், இடம்பெயர்ந்து வந்த நலிந்த பிரிவினரும் பிரச்சனைக்கு உட்பட்டு வாழ்க்கை வசதிகளை இழந்து கரையோரப் பகுதிகளில் குடியேறலாயினர்.

இத்தகைய குடியேற்றம் காரணமாகவும், ஏற்கனவே அமைந்திருந்த கரையோர மீன்பிடிக் குடியிருப்புக்களில் ஏற்பட்ட மிகையான சனப் பெருக்கம் காரணமாகவும் வாழிட வசதிகளைப் பெருக்குவதற்குத் தடையாகவுள்ள நிலப்பற்றாக் குறையால், நகரின் கரையோரப் பகுதி பிரச்சனை பலவற்றை எதிர் நோக்கி நிற்கிறது.

கரையோரப்பகுதி வாழ் மக்கள் போதிய வீட்டு வசதியின்மையாலும், குடிநீர், பொதுச் சுகாதார வசதிகளின்மையாலும் பல அசௌகரியங்களின் மத்தியில் வாழ்க்கை நடத்துகின்றனர். மேலும் இங்கு குடியேறியோரில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர் அரச காணிகளிலும், தனியார் காணிகளிலும் சம்மதமில்லாமல் வாழ்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

சேதத்துக்கு உள்ளான பல பொதுக் கட்டடங்களில் குடும்பங்கள் பல வாழ்வதனையும் காணமுடிகிறது. இதன் காரணமாகப் பல அரச நிறுவனங்கள் செயலாற்ற முடியாமல் இடம் பெயர்ந்தும், செயலிழந்தும் இருப்பதனைக் காணலாம்.

காக்கை தீவில் இருந்து பூம்புகார் வரை கரையோரப் பகுதியில் ஏற்பட்டுவரும் மாற்றங்களையும் இப்பகுதி எதிர்நோக்கும் பிரச்சனைகளையும் நோக்குவோம். இக்கரையோரப் பகுதியில் நாவாந்துறை, குருநகர், பாஷையூர் கொழும்புத்துறை ஆகிய பழைய குடியிருப்புக்கள் ஆகும்.

ஆயிரத்தித் தொழாயிரத்தி அறுபதுக்கு முன்னர் இக்குடியிருப்புக்களுக்கு இடைப்பட்ட பரப்புக்கள் வாழிடம் அல்லாத செறிவற்ற நிலைப்பயன்பாட்டுப்பண்புகளைக் கொண்டிருந்ததுடன், கரையோரப் பெருஞ் சாலைக்கும் (Beach Road) கடலுக்கும் இடைப்பட்ட பரப்பு திறந்த கடற்கரைப் பகுதியாக இருந்தது. இப்பரப்பு புதுக்காற்றை வாங்குல் இடமாகப் பயன்படுத்தப்பட்டது.

பாஷையூருக்கும் குருநகருக்கும் இடைப்பட்ட பகுதியில் கரையோரப் பெருஞ் சாலையின் நிலப்பக்கமாகச் செறிவற்ற நிலப்பயன்பாடு காணப்பட்டதுடன், பல அரச நிறுவனங்கள் இட அமைவு பெற்றிருந்தன. இதேபோல் பண்ணைப் பாலத்திற்கும் மேற்குப் பகுதியில் மார்பு சிகிச்சை நிலையம், யாழ்ப் பாணப் பாடசாலைகளின் விளையாட்டு மைதானம். தென்னந் தோட்டங்கள். பயன்படுத்தப்படாத தாழ்வான நிலப்பரப்புக்களும் சதுப்புக்களும் காணப்பட்டன.

கரையோரப் பகுதியை மூன்று பிரிவுகளாகப் பிரித்து நோக்கலாம்.

1) காக்கை தீவிற்கும் பண்ணைக்கும் இடைப்பட்ட பகுதி.

2) பண்ணைக்கும் அலுப்பாந்திக்கும் இடைப்பட்ட பகுதி.

3. அலுப்பாந்திக்கும் அரியாலை முளங்குக்கும் இடைப்பட்ட பகுதி.

காக்கை தீவிற்கும் பண்ணைக்கும் இடைப்பட்ட பகுதியில் சாவற்காடு. குடியேற்றம், வசந்தபுரம், பொம்மை வெளி குடியேற்றம், நாவாந்துரை மேற்குக் குடியிருப்பு, கண்ணாம்புரக் குடியேற்றம், சோலைபுரம், முத்தமிழ் கொலனி, மீனாட்சிபுரம் போன்றன முக்கியமான குடியிருப்புக்கள் ஆகும். இவற்றுள் சில பழையன. ஏனையவை அண்மைக்கரலத்தில் அரசாலும் சுயமுயற்சியாலும் விருத்தியாக்கப்பட்டவை.

இக்குடியிருப்புக்கள் தாழ் நிலப்பரப்பாக இருந்து மீட்கப்பட்டபரப்புக்களில் அமைந்துள்ளன. கரையோரப்பெருஞ் சாலை ஓரமாக மாநகரசபைக் குப்பை ஒதுக்கினதால் மேடாகி மீட்கப்பட்ட நிலப் பரப்புகளில் சிலவுள்ளன. உதாரணமாக முத்தமிழ் கொலனி இருக்கும் இடம் முழுமையான கடல் பரப்பாக இருந்தது. இதேபோல் கண்ணாபுரம் சதுப்புப் பகுதியாகவும், வசந்தபுரம் கடற்கரையோரமாகவும், பொம்மை வெளி நெற்காணியாகவும் விளங்கின. இவைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு முறையில் நிலமீடசி செய்யப்பட்டனவாக இருந்தன.

கரையோரப் பகுதிகளில் மாநகரசபை குப்பை கொட்டுவதன் காரணமாக அப்பகுதிகள் உயர்த்தப்பட்டன. இப்பிரதேசங்களில் இன்றும் குப்பைகூளம், கழிவுப்பொருட்கள், பழைய வாகனங்களின் பகுதிகள் அங்கும் இங்குமாகக் காணப்படுகின்றன. மாநகர சபையால் குப்பை கொட்டு. வதன் மூலம் நிரப்பப்பட்ட வசந்தபுரப் பகுதியில் வசதிக் குறைவானகுடிகள்பல அமைக்கப்பட்டன. இப்பகுதி மக்கள் சமுக-பொருளாதார ரீதியில் மாத்திரமல்லாமல் பௌதிகச் சூழல் குறைவான பகுதிகளிலும் வாழ்வதைக் காணலாம்.

நாவாந்துறையில் நிக்களஸ் விளையாட்டுத் திடலுக்கு மேற்கில் கரையோரமாக அமைந்துள்ள குடிசைகள் அடிப்படை வசதிகள் அற்று இருப்பதனைக் காணமுடிகிறது. இக் குடியிருப்புக்குத் தெற்கில்கண்ணாபுரம்அமைந்

—07 ஆம் பக்கம் பார்க்க

# செய்தி மஞ்சரி

## வாகன பாவனைக்கு கட்டுப்பாடு

ஒவ்வொரு அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் நான்கு உத்தியோக பூர்வமான வாகனங்களுக்கு மேல் உபயோகிக்கக் கூடாதென அரசாங்கம் கட்டுப்பாடு விதித்துள்ளது.

நான்கிற்கு மேலான உத்தியோகபூர்வ வாகனங்கள் இருப்பின் அவை பறிமுதல் செய்யப்பட்டு அவசரமாக வாகனங்கள் தேவைப்படும் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.

இதே சமயம் ஒரு அரசாங்க அதிபரின் அலுவலகத்தில் கடமையாற்றும் சாரதிகளின் எண்ணிக்கை நான்காக மட்டுப் படுத்தப்பட்டுள்ளது,

அரசாங்க அதிபர் அலுவலகம் ஒன்றில் அரசாங்க அதிபர் மட்டுமே உத்தியோகபூர்வமான வாகனத்தை உபயோகிக்க உரிமையுள்ளவர். மாதம் ஒன்றுக்கு 600 கிலோ மீட்டருக்கு மேல் பிரயாணம் செய்தால் மேலதிக கிலோ மீட்டருக்கான எரிபொருள் செலவை அரசாங்க அதிபரே செலுத்த வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (7கி)

## 46 வீத ஆசிரியருக்கு பயிற்சி இல்லை

இலங்கையில் கடமையிற்றும் 190000 ஆசிரியர்களில் 46 சதவீதமானோர் பயிற்றப்படாதவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களைப் பயிற்றுவிக்கும் திட்டத்தைகல்வி அமைச்சு விரைவில் துரிதப்படுத்தவுள்ளது ஆசிரியர் கலாசாலைகள் மூலமும், தொலைப்பயிற்சி நெறியின் கீழும், பாடசாலைகள் ஊடாகவும் இவ் ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் பொருட்டு புதிய ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. (7. கி)

## தமிழ்த்தினவிழா கொழும்பில்

அகில இலங்கை தமிழ்த்தின விழா இம்மாதம் 15ம், 16ம் திகதிகளில் கொழும்பில் நடை பெறவுள்ளது.

சகல மாவட்டங்களிலுமிருந்து போட்டியாளர்கள் கொழும்பு வர உள்ளதாகவும், விழா கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

விழாவின் போது பல சிரேஷ்ட அமைச்சர்களும் கலந்து கொள்வார்கள். போட்டியில் வெற்றியீட்டுவோருக்கு 16ந் திகதி மாலை நடைபெறும் பொது வைபவத்தில் பரிசுகள் வழங்கப்படவுள்ளது. (8கி)

## ஜேர்மன் நிதியுதவி

வவுனியா மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் மலசல கூட குடி தண்ணீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கென ஜேர்மன் குடியரசு 63 இலட்சம் ரூபாவினை வழங்க உள்ளது.

அத்தோடு முன்னுரிமை அடிப்படையில் கொத்தணி அதிபர்களின் சிபார்சின் பேரில் தெரிவு செய்யப்படும் 15 பாடசாலைகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்குரிய நிதியை வழங்குவதற்கு வடக்கு - கிழக்கு மாகாண சபை இணக்கம் தெரிவித்துள்ளது. (7கி)

## இலங்கை மீண்டும் தெரிவு

39 வருட காலத்திற்குப் பின்னர் மீண்டும் இலங்கை யூனிசெப் நிர்வாகக் குழுவிற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் 1951 — 52 வரையான ஓராண்டு காலப் பகுதியிலும் யூனிசெப் நிர்வாகக் குழுவில் இலங்கை சேவை புரிந்து வந்துள்ளது,

யூனிசெப் நிர்வாகக் குழு தேர்தல் கடந்த 23 ஆம் திகதி இடம் பெற்றது. (7கி)

## கொழும்பு அலுவலகம் மூடுவிழா

கொழும்பில் இயங்கி வரும் சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசியப் பிரசுர விநியோக நிலையம் மூடப்பட உள்ளது.

இதற்குப் பதிலாக புதிய அலுவலகம் ஹொங்கொங்கில் ஆரம்பிக்கப்படும்.

அடுத்து வரும் மாதங்களில் கொழும்பு அலுவலகத்தின் பணிகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு செப்டம்பர் மாதம் முழுமையாக மூடப்படும். (ப 7கி)

## பல்கலைக்கழகப் பரீட்சைகள்

யாழ் பல்கலைக்கழகத்தில் சிறப்புக் கலைமாணி, வர்த்தமாணி, தொழில் நிர்வாக மாணி இறுதியாண்டுப் பரீட்சைகள் 12ம் திகதி ஆரம்பமாகி பதினாறாம் திகதி வரை நடைபெறும். (4கி)

## நீர் விநியோகத்திற்கு உதவி

வடக்கு-கிழக்கில் நீர் வழங்கல் வடிகால் சீரமைப்புப் பணிகளுக்காக ஜேர்மன், ஆவுஸ்திரேலியா யுனிசெப் ஆகியன பெருமளவு நிதி உதவியை மத்திய புனர்வாழ்வு அமைச்சின் ஊடாக வழங்கியுள்ளன.

இந்த நிதியிலிருந்து 1 கோடி 18 இலட்சம் ரூபா கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நீர்த்தாங்கிக்குழாய் இணைப்பு வேலைகளுக்கும் 83 இலட்சம் ரூபா வவுனியா மாவட்ட வேலைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அதனுடன் மூன்று நீர் இறைக்கும் இயந்திரங்களை அவுஸ்திரேலிய அரசு வழங்கியுள்ளது (7கி)

வன்செயல் பாதிப்பு

# மட்டு. மாநகர சபைக்கு நிவாரணம் எதுவுமே இல்லை

(மட்டக்களப்பு)

கடந்த கால வன் செயல்களின் போது மட்டக்களப்பு மாநகரசபையின் சொத்துக்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டது. வருமானமும் பெருமளவு விழ்ச்சியடைந்தது.

ஆனால் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு இது வரை மாநகரசபைக்கு எந்த விதமான நிவாரணமும் வழங்கவில்லை என மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் திரு. கே.கார்த்திகேசு தெரிவித்தார்.

மாநகர சபைக்கு கடந்த காலங்களில் ஏற்பட்ட சொத்து இழப்புகளாலும்,வருமான விழ்ச்சியினாலும்,சட்ட விரோத மின் பாவனையாலும் மாநகரசபையின் வங்கிக் கணக்கில்நிதிமுற்றாக முடிந்துவிட்டதாகவும் இதனால்சபை எந்த வித அபிவிருத்தி வேலைகளையும் தொடரமுடியாத நிலையில் ஊழியர்களின் சம்பளத்தை வழங்குவதற்கே திண்டாடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை, இந்திய இராணுவங்கள் என்பவற்றுடன் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சில பொது மக்களும் மாநகர சபையின் சொத்துக்களுக்கு சேத மேற்படுத்தியுள்ளனர்.

மாநகரசபைக்கு சொந்தமான வாகனங்கள், கட்டிடங்கள் என்பன வாடகைசெலுத்தாது பலவந்தமாக பாவிக்கப்பட்ட மையால் பல இலட்சம் ரூபா நட்டமேற்பட்டுள்ளது.

வரிகள் செலுத்தாது, சட்ட விரோத மின்சாரத்தை பெற்று பாவித்து மீற்றர்களில் குளறுபடிகளை ஏற்படுத்தி மாநகர சபைக்கு பொது மக்கள் நட்டத்தை ஏற்படுத்தியுள்ளனர் என மாநகரசபை நிர்வாகம் குறைபட்டு கொள்கிறது.

மாநகரசபைக்கு சொந்தமான பல"ட்ரக்டர்கள்" பறிக்கப் பட்டுள்ளன. சேதமாக்கப் பட்டுள்ளன. சபைக்கென ட்ரக்டர்கள் இல்லாததால் தற்போது மாதத்திற்கு 18 ஆயிரம் ரூபாய் ட்ரக்டர் வாடகையாக மாநகரசபை செலுத்தி வருகிறது.

மாதாந்தம் மின்சாரசபையிடமிருந்து 7 லட்சம் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும் மின்சாரம் மாநகர சபையால் 5 லட்சம் ரூபாவுக்கே விற்கப் படுகிறது.

2 லட்சம் ரூபா மாதாந்தம் மின்சார விநியோகத்தால் மாநகர சபைக்கு நஷ்ட மேற்படுவதாக மாநகரசபை ஆணையாளர் தெரிவிக்கிறார்.

சட்ட விரோத மின்பாவனையும், மீற்றர்களில் மாற்றங்களை செய்து மோசடி செய்வதாலுமே இந்த நட்டம் ஏற்படுவதாக அவர் தெரிவித்தார்.

மாநகரசபை அபிவிருத்தி வேலைகளை தொடரவேண்டுமாயின் இத்தகைய சமூக விரோத செயல்கள் நிறுத்தப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## கைத்தறி- நெசவுத் தொழில்; பாரிய அபிவிருத்தித் திட்டம்

ஜனாதிபதியின் கட்டளைப் பிரகாரம் கைத்தறி நெசவுத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான பாரியதிட்டம் ஒன்றைப் புடவைக் கைத்தொழிற் திணைக்களமும், கைத்தறிக்கான திட்ட அமைச்சும் தயாரித்துள்ளன.

இப் புதிய திட்டத்தின் கீழ் பின்வரும் ஊக்குவிப்புக்களும், மானியமும், கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டுள்ளன.

நூல் விநியோகம் 10% மானியவிலையில் வழங்கவும், தொழிலுக்குத் தேவையான றீட்ஸ், கீல்ஸ், சட்டில் மற்றும் ஏனைய உபகரங்கள் வழங்கவும், கைத்தறிகளை விருத்தி செய்வதற்காக திருப்பிச் செலுத்தத் தேவையில்லாத மானியக் கொடுப்பனவு ரூபா 1500/ வழங்கவும் கடன் வழங்க நிதி உதவி ஏற்பாடுகள் செய்யவும் சந்தைப்படுத்தல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும், கைத்தறி ஏற்றுமதியை அபிவிருத்தி செய்யவும், நெசவாளர்களுக்கு விசேட காப்புறுதித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன

இலங்கையிலுள்ள சகல கைத்தறித் தாபனங்களினதும், நெசவாளர்களினதும் விபரங்களைத் திரட்டி, ஊக்குவிப்பு வசதிகளையும், உற்சாகமூட்டும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு, கைத்தறித் தொழிலை அபிவிருத்தி செய்யவேண்டி ஏற்பட்டுள்ளதால், மேற்படி தொழிலில் ஈடுபடுவோர் தங்களது விண்ணப்பங்களை புடவைக் கைத்தொழில் கச்சேரி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி யாழ்ப்பாண மாவட்ட புடவைக் கைத்தொழில் உதவிப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (47)

## அ. அதிபர் வலிகாமம் விஜயம்; வீடமைப்பையும் பார்வையிட்டார்

(சங்கானை)

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு கடந்த வாரம் உத்தியோக பூர்வமான விஜயம் ஒன்றை மேற்கொண்ட யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிரட் ஐக்கிய நாடுகள் அகதிகள் புனர்வாழ்வு உயர் ஸ்தானிகராலயத்தின் நிதி உதவியைக் கொண்டு சுழிபுரம், மூளாய், பொன்னாலை ஆகிய இடங்களில் நிறுவப்பட்டு வரும் வீடுகளை நேரில் சென்று பார்வையிட்டார்.

பொன்னாலை கிராமத்தில் மேற்படி நிதி உதவி மூலம் நிறுவப்பட்டுள்ள புதிய பொதுக் கிணற்றையும் அரச அதிபர் பார்வையிட்டார்.

சங்கானையிலுள்ள வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு வருகை தந்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அங்கு கிராம சேவை அலுவலர்களின் கூட்டம் ஒன்றிலும் உரையாற்றினார்.

தொல்புரத்தில் புதிதாக சுமார் 15 இலட்ச ரூபா செலவில் நிறுவப்பட்டு வரும் வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக் கட்டிட வேலைகளை அன்ரன் அல்பிரட் நேரில் சென்று பார்வையிட்டார்.

சித்தன்கேணி மாதர் கிராம முன்னேற்றச் சங்கத்திற்கு விஜயம் செய்த அரச அதிபர் அங்கு நடைபெற்று வரும் தையல் பயிற்சி நெறியையும் பார்வையிட்டார். (13)

## நலன்புரிச் சங்கம்

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய நலன்புரிச் சங்கக் கூட்டம் வித்தியாலய உப அதிபர் திரு. ப. நல்லதம்பி தலைமையில் நடை பெற்றது.

திருமதி றஞ்சினி ஆனந்த குமாரசாமி தலைவியாகவும், திரு. ரீ. எஸ். பாலசுந்தரம் செயலாளராகவும், திரு. க. ஜெயரதி பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். (36)

## ஒற்றுமை ஓங்கினாலே சமுதாய முன்னேற்றம்

நாம் எல்லோரும் ஒன்றுபட்டு எமது சமுதாயத்திற்கு நல்வாழ்வு கிடைக்கப் பாடுபட வேண்டும் இன்றைய சூழ்நிலையில் மனிதனிடம் அன்பு, சமாதானம், ஒற்றுமை நிலவச் செய்ய வேண்டியது அவசியம்.

இவ்வாறு கொழும்புத்துறை வசந்தபுரம், மணிப்புரி, அரியாலை, உதயபுரம், எழினூர் கிராம மக்களின்ஒன்றிணைந்த கூட்டுவழி பாட்டில் பேசுகையில் பாஷயூர் உதவிப் பங்குத் தந்தை அருட் திரு. பிரான்சிஸ் அடிகளார் கூறினார்.

மறை வாழ்வில் பொது நிலையினரின் பங்கு என்னும் தலைப்பில் அருட்திரு. ஜெபநேசன் அடிக்களார் சிறப்புரை ஆற்றினார் புலவர் திரு அரியநாயகம் கவிதை படித்தார்.(36)

தேசிய சேமிப்பு பணவைப்புப் புத்தகத்தில்

## 50 ஆயிரம் வரை பெறுவதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது

தேசிய சேமிப்பு வங்கி பணவைப்புப் புத்தகங்களில் பணவைப்பு செய்த தொகையில் அஞ்சல் அலுவலகங்களில் ஆணைப்பத்திரங்கள் மூலம் எடுக்கக் கூடிய பணத்தின் உச்ச எல்லை ரூபா இருபதினாயிரத்திலிருந்து ரூபா ஐம்பதினாயிரமாக அதிகரிக்கப் பட்டுள்ளது.

அஞ்சற் திணைக்களம் தேசிய சேமிப்பு வங்கி இணைப்புக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டதீர்மானத்திற்கமைய அண்மையில் நடைபெற்ற தேசிய சேமிப்பு வங்கிப் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இத் தீர்மானம் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்குவந்துள்ளதாக சகல அஞ்சலதிபர்கள், உப அஞ்சல் அதிபர்கள் ஆகியோருக்கு இலங்கை தேசிய சேமிப்பு வங்கி சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளது. (18)

காணியற்றவர்க்கு காணிவழங்கும் திட்டத்தின் கீழ்

# 595351 ஏக்கர் காணி விரைவில் பகிர்ந்தளிக்கப்படும்

காணிகளைப் பயன் படுத்துதல், விநியோகித்தல் சம்பந்தமாக ஆராய்ந்த ஜனாதிபதி விசேட பணிக் குழு 595351 ஏக்கர் காணிகளை பங்கீடு செய்ய இனங் கண்டுள்ளது.

இதன் பிரகாரம் வடக்குக் கிழக்கில் 32548 ஹக்டயர் காணிகள் இனங் காணப்பட்டன.

மேற்படி விசேட பணிக்குழுவின் காலக் கெடு கடந்த ஏப்ரல் 26 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ள தெனினும் இதன்காலஎல்லையைமேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

248. 405 ஏக்கர் காணிகள் மதிப்பீடுசெய்யப் பட்டு துண்டுகளாக்கப் பட்டுள்ளன. இவற்றுள் 112, 204 ஏக்கர்கள் தேவையான குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக் கப்பட்டுள்ளன.

கடந்த ஆறு மாத காலத்தில் இது நடை பெற்றுள்ளது கடந்த காலத்தில் காணி ஆணையாளர் திணைக்களத்தின் காணிப் பங்கீடு வருடத்திற்கு 20 ஆயிரம் ஏக்கராகவே இருந்தது.

ஆனால் ஜானதிபதி செயல் அமைப்பு குறுகிய காலத்தில் 112, 204 ஏக்கர்களைப் பகிர்ந் தளித்துள்ளது.

இதற்கென 2494 காணிக் கச்சேரிகள் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளன. இவற்றுள் 745 காணிக் கச்சேரிகளுக்கான தெரிவுகள் இறுதியாக்கப் பட்டுள்ளன.

காணிச் சீர்திருத்தஆணைக் குழு மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை அரசாங்க பெருந்தோட்ட கூட்டுத் தாபனம் ஆகிய வற்றின் காணிகளில் 26, 540 ஏக்கர் பகிர்வுக்காக இனங் காணப்பட்டுள்ளது. (7கி)

பிரிட்டிஷ்

## சத்திரசிகிச்சை நிபுணர்குழு யாழ்ப்பாணம் வருகிறது

எரிகாயம், வேறு பாரிய காயம் உடலில் ஏற்பட்டுள்ள தழும்புகள், அவலட்சண காயம், அவயவங்கள் வழங்காத தன்மை, குழந்தைகளுக்கு மாற்றுச்சிகிச்சை ஆகியவை அளிப்பதற்கான சத்திரசிகிச்சைநிபுணர்குழு ஒன்று இம்மாதம் 11ந் திகதி வந்து கொழும்பு, மாத்தறை,யாழ்ப்பாணம்] ஆகிய இடங்களில் சத்திரசிகிச்சைப் பணியை மேற்கொள்ளவுள்ளது.

இக்குழுவில்பிரிட்டிஷ்நிறுவனத்திலிருந்து இருசத்திர சிகிச்சை நிபுணர்கள், இரு தாதிகள், நிறுவனத்தின்நிர்வாகப்பணிப்பாளர் ஆகியோரே அடங்குகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட சுமார் பத்து தொடக்கம் பதினைந்து பேருக்கு மாத்திரம் சிகிச்சை அளிக்கப்படும்.

சிகிச்சை பெறவிருக்கும் குழந்தைகளின் பெற்றோர் இம்மாதம் 8ந் திகதி யாழ் போதனா வைத்தியசாலை வெளி நோயாளர் சிரேஷ்ட வைத்திய அதிகாரியுடன் தொடர்பு கொள்ளுமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஸ்ரீ)

## வலி-மேற்கில் மூல வள ஆய்வு மேற் கொள்ளப் படுகின்றது

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கொழும்பிலுள்ள திட்ட அமுலாக்கல் அமைச்சு விடுத்துள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் மூல வள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

மூல வளத்தை கண்டறிந்து அபிவிருத்திக்கு தடையாக உள்ள காரணிகளைப்பற்றிய விவரங்களை திரட்டுமுகமாக இந்த மூல வள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இப்பிரிவிலுள்ள பல் வேறு அரசாங்கதிணைக்களங்களிலிருந்தும், தனியார் நிறுவனங்களிலிருந்தும் கிராம ரீதியாக விபரங்கள் திரட்டப் பட்டு வருவதாகவும் இது பற்றி தெரிவிக்கப்படுகின்றது (13)

## பாதிப்பு எனப் புகார்

குருநகர் ட்றோலர் மீன் பிடியாளர்களினால் தாங்கள் பல வித பாதிப்புக்கள் அடைவதாக அனலைதீவு மீனவர் சங்கமும் மண்டைதீவு மீனவர் சங்கமும் விடுதலைப் புலிகளின் வேலணை அலுவலகத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு. வி. கஸ்ரோவிடம் தெரிவித்தனர்.

இதுபற்றிய முழுமையான தகவல்கள் கிடைத்தவுடன் தாங்கள் இதுபற்றி கதைப்பதாக அவர் கூறினார். (24

## வடமராட்சி கிழக்கில் நான்கு இணக்க மன்றுகள்

வடமராட்சி கிழக்குப்பகுதியில் நான்கு இணக்க மன்றுகள் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

வடமராட்சி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மக்கள் தொடர்பாளர் திரு பீ. ஏ. ஸ்ரனிஸ்லோஸ் இணக்க மன்றுகளை ஆரம்பித்து வைத்து இணக்க மன்று யாப்பு பற்றி உறுப்பினர்களுக்கு உரையாற்றினார்

வடமராட்சி கிழக்கு மக்கள் முன்னணி வடமராட்சி கிழக்குப் பொறுப்பாளர் திரு சில்வெஸ்டரும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டார்.(18

## நூலகருக்கு கௌரவம்

இலங்கை நூலகச் சங்கத்தின் முப்பதாவது ஆண்டு நிறைவைச் சிறப்பித்து நூலகவியலுக்கும் நூலகவியக்கத்திற்கும் சேவையாற்றிய இருவருக்குப் பாராட்டும் வைபவம் ஒன்றை நூலகச் சங்கம் அண்மையில் நடத்தியது.

கொழும்பிலுள்ள இலங்கை தேசிய நூலக சேவைகள் சபை மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் சங்கக்கல் வி அதிகாரி என்.யூ. யாபா, யாழ் மத்திய கல்லூரி நூலகர் காமாணிக்கவாசகர் ஆகியோர் இலங்கை தேசிய நூலகர் திருமதி. ஈஸ்வரி கொரியாவினால் மலர் மாலை அணிவிக்கப்பட்டுப் பாராட்டிதழ்களும் வழங்கப்பட்டன.

## நுண்கலைப் பரீட்சை இன்று ஆரம்பம்

இராமநாதன் நுண்கலைப் பிரிவின் 1989 ஆம் ஆண்டிற்குரிய இறுதி ஆண்டுப் பரீட்சை இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இப்பரீட்சை எதிர்வரும் ஏழாம் திகதி வரை நடைபெறும். (4 கி)

## மருதனாமடம் கோட்டத்தில் கற்பித்தல் கருத்தரங்கு

மருதனாமடம் கோட்டப் பாடசாலைகளில் ஐந்தாம் வகுப்புகளுக்குத் தமிழ், கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கற்பித்தல் சம்பந்தமான விசேடக் கருத்தரங்கு ஒன்று இம்மாதம் 7ந் திகதி காலை 8.30 மணி முதல் மாலை 3-30 வரை இராமனாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி ஆசிரியர்களுக்கு புலமைப் பரிசில் சம்பந்தமான விஷேட கற்பித்தல் முறைகளைப் பயிற்றுவதற்காக உதவிக் கல்விப் பணிப்பாளர் க. குலசேகரன் கல்வி அதிகாரி இ. இரட்ணராஜா ஆகியோர் இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்துள்ளனர். (ப-2கி)

## விடுதிகளுக்கு கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடு

தென் பகுதிகளில் மீண்டும் தீவிரவாதக் குழுக்களின் தாக்குதல்கள் ஆரம்பமாகியுள்ளதை அடுத்து அனைத்து உல்லாசப் பயணிகள் விடுதிகளின் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

அநுராதபுரம், பொலநறுவை, கொழும்பு போன்ற இடங்களில் தாக்குதல்களுடன் கொள்ளைச் சம்பவங்களும் இடம்பெற்று வருவதால் தற்போது பெருமளவு வருகை தரும் உல்லாசப் பயணிகளின் வருகை பாதிக்கப்படலாம் என பாதுகாப்பு வட்டாரங்கள் அச்சம் தெரிவித்துள்ளன.

## ஆசிரிய ஆலோசகர்களாக இருவருக்கு பதவியுயர்வு

மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் இருவருக்கும் ஆசிரிய ஆலோசகர் பதவியுயர்வு கிடைத்துள்ளது.

திருமதி ஸ்ரீரங்கராணி இராமச்சந்திரன் சங்கீத ஆசிரிய ஆலோசகராகவும், திருமதி தனபாக்கியம் இராசலிங்கம் சித்திர ஆசிரிய ஆலோசகராகவும் பதவியுயர்வு பெற்றுள்ளனர்.

இவ் விருவரும் வேலணை கோட்டைக் கல்விப் பிரிவில் இம் மாதம் முதல் கடமையாற்றுவர். (ப—12)

# வன்னிச் செய்திகள்

## தாபல் சேவை பாதிப்பு

வவுனியா அஞ்சல் திணைக்களத்தின் பெரும்பாக அத்தியட்சகர் வவுனியா மாவட்டத்திலுள்ள செட்டிகுள உப அஞ்சல் அலுவலகத்தினால் அங்கு வாழும் மக்களுக்கு சிறந்த சேவையாற்ற முடியாதிருப்பதாகவும்இதனால் அந்தஊர்மக்கள் தங்கள் முக்கிய அலுவல்களை கவனிப்பதற்கு வவுனியா, மதவாச்சி முருங்கன் போன்ற இடங்களுக்கு செல்ல வேண்டியுள்ளதாகவும் இவை செட்டிக்குளத்திலிருந்து முறையே 18. 15.14 மைல்கள் அப்பாலுள்ளன வென்றும் தெரிவித்துள்ளார்.

## விவசாயப்பாடசாலைக்குநிதி

''சென்ற ஆண்டிலிருந்து வாவுனியா மாவட்டத்தில் இயங்கி வரும் விவசாயப் பாடசாலைக்கு அதன் தரத்தை உயர்த்துமுகமாகவும் அங்கு கல்விபயிலும் மாணவர்களின் கல்விக்கு மேலும் வசதியளிக்குமுகமாகவும் விஞ்ஞான ஆய்வு கூடம் ஒன்றை அமைக்க வன்னி பாரளுமான்ற உறுப்பினர் கௌவர கே. ஆர். குகனேஸ்வரன் இவ்வருடம் தனக்களிக்கப் பட்டுள்ள பன்முக வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து ஆறு லட்சம் ரூபாவினை ஒதுக்கியுள்ளார்.''

## முகாமைத்துவப் பயிற்சிக்குத்தெரிவு

நகர திட்டமிடல் முகாமைத்துவ பயிற்சியினை பெறுவதற்காக வவுனியா நகரசபையின் செயலாளர் ராஜாதணிகாசலம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆறுமாதகால பயிற்சி கொழும்பில் நடைபெற்று வருகின்றது. வடக்குகிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஒரு தமிழர் இவர் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. (11கி)

## விவசாய உற்பத்திக்கு நிதி

முல்லைத் தீவு மாவட்டத்தில் விவசாய உற்பத்தியை அதிகரிக்க ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் நிதியுதவி அளித்துள்ளது.

இதன்படி இங்குள்ள பெரியகுளம் கரிப்பட்ட முறிப்புக் குளம் ராமையன்குளம், பாலைக் கட்டுவன் குளம், தொஸ்திமோட்டைக்குளம் என்பன எதிர்வரும் பெரும் போகத்திற்கு முன்னர் திருத்தியமைக்கப் படவுள்ளன.

## வவுனியா வீதிகள் திருத்தப்படும்

வாவுனியா நகர சபை சில வீதிகளை திருத்த நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

கிராமோதைய சபைகள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், சன சமூக நிலையங்கள் ஆகியன ஒப்பந்த வேலையினை பெற்று இத்திருத்த வேலைகளை மேற்கொள்ள முடியுமென வவுனியா வீதி நகர சபை செயலாளர் அறிவித்துள்ளார்.

பூந்தோட்டம்- பெரிய குளம் வீதி, ஆஸ்பத்திரிசுற்றுவட்ட குருமன்காடு -தாண்டிக்குளம் வீதி சுடலைவீதி, குட்செட் வீதி, தெற்கிலுப்பைக் குளம் வீதி, இவையே திருத்தப்படவுள்ள வீதிகளாகும்.

பல இலட்சம் ரூபாய் திருத்த வேலைகளுக்கென ஒதுக்கீடு செய்யப் பட்டிருப்பதாக உள்ளூராட்சித்திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார். (11 கி)

## ஆசிரியர் இடமாற்றம்

வாவுனியா கோவில்புதுக் குளம் லித்தியாலயத்தில் ஆங்கில ஆசிரியராக கடமையாற்றிய கே. சிவஞாம் வவுனியாமகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார்.

பூவரசங்குளம் லித்தியாலயத்தில் கனித ஆசிரியையாக கடமையாற்றிய செல்வி க. வையாபுரிநாதன் வவுனியா மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (11கி)

## நூலகம் விரைவில் இடம்மாறும்

சுமார் ஐந்து வருட இடவளிக்கு பின் வவுனியா நகர சபை நூல் நிலையம் பழைய கட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது.

மிகவிரைவில் இந்த இடமாற்றம் நடைபெறும் என நம்பத்தகுந்த வட்டராங்கள் கூறின.

தற்போது நூல் நிலையம் இயங்கிவரும் கட்டிடம் வவுனியா பொலிஸ் அத்தியட்சகரின் காரியாலயமாக செயல்படுமென விடயம் அறிந்த வட்டராங்கள்தெரிவித்தான. (11கி

## விதை நெல் சேகரிப்பு

மன்னர் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் மன்னார் மாவட்டத்தில் உள்ள வறிய விவசாயிகளுக்கு விதை நெல் வழங்க முன்வந்துள்ளது.இதற்காக 15.000புசல் நெல் தேவைப் படுகிறது. இதில் இச்சங்கம் 10,000 புசல் விதை நெல்லைச் சேகரித்துள்ளது ஆட்காட்டி வெளியில் ஒரு கட்டடத்தில் விதை நெல் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது.

இரண்டு ஏக்கருக்கு நான்கு புசல் வீதம் விதை நெல் வழங்கப்படும்: விதைப்புக் காலமான நவம்பரில் இது வழங்கப்படுமெனத் தெரிவிக்கப் படுகின்றது. (17 கி)

கொழும்பு பல்கலைக்கழக சமூக விஞ்ஞானத்துறை தலைவர் கவலை

# 30 லட்சம் தமிழர் இருந்தும் தமிழ் அறிஞர்களுக்கு இங்கு பஞ்சம்

முப்பது இலட்சம் மக்களைக் கொண்ட தமிழர் சமூகத்தில் அறிவுப்பஞ்சமும் அறிஞர் பஞ்சமும் காணப்படுகிறது. வரலாறு, புவியியல், கல்வியியல் போன்றவற்றில் ஆய்வுகளை மேற்கொள்ள போதிய அறிஞர்கள் இல்லை பதவ்யுயர்வு, சிறந்தபதவி சூழ்நிலையும் நாட்டின் பாரதூரமான சூழ்நிலை என்பன காரணமாக தமிழ்அறிஞர்கள் நாட்டை விட்டு வெளியேறி விட்டனர்.

இவ்வாறு கொழும்பு பல்கலைக்கழக, சமூக விஞ்ஞான கல்வியியல் துறைத் தலைவர் எஸ். சந்திரசேகர், 'இலங்கை வாழ் தமிழ் மக்களின் பல்கலைக்கழக கல்வி' என்ற பொருள்பற்றி ஆய்வுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

தமிழர்களின் உயர்கல்வியில் எவ்வளவோ பிரச்சினை இருந்தாலும் இத்துறையில் இவர்கள் விரிவான ஆய்வுகளைச் செய்யவில்லை. இத்துறைக்கான விரிவான தேவை ஒன்று இருக்கிறது. 1940 இல் இந்தியமரவு வழி தமிழர் பிரச்சினையும், 1950 களில் மொழிப்பிரச்சினையும்1970ல் கல்விசம்பந்தமான பல்கலைக்கழக அனுமதி போன்றனவும் இலங்கையில் இனங்களுக்கிடையிலான உறவுகளை பெரிதும் பாதித்தன.

'கல்வி துறையில் அறிஞர்களின் முயற்சியால் மாவட்ட அனுமதிப்பங்கு, பின்தங்கிய மாவட்ட அனுமதிப் பங்கு போன்ற அனுமதிக்கொள்கைகள் அனுமதிக்கப்பட்டன.

'1961 இல் 19 வீதமாக இருந்த தமிழ் மாணவர்களின் விகிதாசாரம் 1971 இல் வீழ்ச்சியடைந்தது. 1975 தொடக்கம் 1983 வரை அனுமதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை அவர்களின் குடித்தொகைக்கு ஏற்ப அமையவில்லை.

'வட பகுதி மாணவர்களின் விசேடஊக்கம்அவர்களுடைய நீண்ட காலக் கல்விப் பாரம்பரியம் என்பன அவர்களை கல்வியில் முன்னேறச்செய்து உயர்கல்வி அனுமதி பெற முடியாதநிலைமையால் அவர்களின் சுயகௌரவமும் தன்மானமும் பாதிக்கப்பட்டதன் விளைவாக வடபகுதியில் தீவிரவாத இயக்கங்கள் தோன்றின.'

தென்னிலங்கை தமிழ் மொழிமூல நெறிப்பயிற்சிகள் படிப்படியாக மூடப்பட்டு வந்தன இதனால் தமிழ் மாணவர்கள் உயர்கல்விக்கு யாழ்ப்பாணம் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது எடுத்துக்காட்டாக பொருளாதார அபிவிருத்தி, உளவியல் மதிப்பீட்டுமுறை,சமூக அபிவிருத்தி முறை ஆகிய துறைகளில் பட்டப்பின் படிப்பு. டிப்ளோமா பயிற்சி நெறிகள் என்பன தென்னிலங்கை பல்கலைக்கழகங்களில் நடத்தப்படுவதால் தமிழ் மாணவர்கள் இப்பயிற்சி நெறிகளில் சேர்ந்து பயில முடிவதில்லை என்று அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தார். (8 கி)

## சுவையானசெய்திகள்

### 'லைட் ஹாவுஸ் மேன்'

சைனாவில் ஒரு சாமியார் இருக்கின்றார் இவர் தனது வழுக்கைத் தலையில் ஏழெட்டு அங்குல மெழுகு வர்த்தியை ஏற்றி வைத்தபடி திரிகின்றார். பொதுமக்களுக்கு இருட்டுப்பயம் ஏற்படாமல் இருக்கவும்,திருட்டு நடைபெறாமல் இருக்கவும் இவர் நடமாடும் விளக்காகவும் உதவுகிறார்.

இரவில் வெளிச்சம் போட்டு அலையும் இந்தச் சாமியாரை லைட் ஹாவுஸ் மேன் என்றே அழைக்கின்றனர். (7 கி)

### காதல் செய்த வேலை

ஸ்பெயின் நாட்டில் ஓர் ஹோட்டல் காவல் காரராக இருப்பவர் தன் காதலை வெளிப்படுத்திய விதம் இவருக்குத் தண்டனை அளித்தது. தன் இதயத்தைக் கவர்ந்தவளின் பெயரின் எழுத்துக்களை ஹோட்டலுக்கு உரிய பளிங்குத் தட்டுக்களால் அமைத்துக் காட்டினார் பிளாட் பாரத்தில் பாதசாரிகள் அவற்றின் மீது மிதித்து சென்றதால் அந்தத் தட்டுக்கள் நொருங்கித் தூளாகின.ஹோட்டல் முதலாளி சும்மாவிடுவாரா? அவரைப் பிடித்து ஒரு கோணிக்குள் போட்டுக் கட்டி நடை பாதையில் உருட்டிவிட்டார்.ஆள் உள்ளே இருப்பது தெரியாமல் நடப்பவர்களில் பலர் அந்தச் சாக்கு மூட்டையைப் பந்தாடி விட்டனர். (7 கி)

### வேண்டாமேஅழகான ஆண்கள்...,

அழகுள்ள உயரமான கட்டு மஸ்தான ஆண்களைக் கல்யாணம் செய்து கொள்ளும் பெண்களை விட சாதாரண அழகில் குறைந்த ஆண்களைக்கல்யாணம் செய்து கொள்ளும் பெண்கள் சந்தோஷமாக வாழ்க்கை நடத்துகின்றனர். என பிரிட்டிஷ் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இவர்கள் 500 பெண்களை ஆராய்சிக்காக பேட்டி கண்டார். அழகான கணவனைப் பெற்ற பெண்களில் 75 சத விகிதப் பேர்கள் குடும்பத் தகராறு காரணமாக விவாகரத்து செய்து. கொண்ட விபரம் கிடைத்தது. அளவிற்கு மிஞ்சினால் ஆழகும் ஆபத்தோ?

### இசையை ரசித்து பாலை...,

போரிஸ் ஜாகா என்பவர் தன்னுடைய பசுக்களிடம் அதிகமாக பால் கறக்க புது இரகசிய முறையைக் கண்டு பிடித்து இருக்கின்றார்.

பால் கறக்கும் போது இனிய இசை விருந்து அளிக்கின்றார். அதைக் கேட்கும் பசுக்கள் அதிக பாலைச் சுரக்கின்றன. முன்னைக் காட்டிலும் இப்போது இசையைக் கேட்க ஆரம்பித்ததிலிருந்து அந்தக் பசுக்கள் 25 சதவீதம் அதிக பாலைக் கொடுக்க ஆரம்பித்துள்ளன. (7 கி)

## பொறியியல்மன்ற நிர்வாகிகள்

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியின் பொறியியல் மாணவர் மன்றத்தின் 1990ம் ஆண்டிற்கான நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு அண்மையில் தொழில் நுட்பக்கல்லூரியின் ''சரஸ்வதி'' மண்டத்பதில் கல்லூரியின் 'உபஅதிபர் கே. ஜெயரட்ணம் தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர்: எம்.தமிழ்ச்செல்வன் உபதலைவர்: ஆர்.யுவராஜா செயலாளர்: கா.யோ. கிரிதரன் உபசெயலாளர்: ஜீவசந்தகுணபாலன் பொருளாளர்: கே.சிவத்திரன் பத்திராதிபர்: எஸ். ரவிச்சந்திரன் கொள்கைபரப்புச் செயலாளர்கள் (1) செல்வி எஸ்.குமுதம் (11) ஜீ .சுகந்தன் கணக்குப் பரிசோதகர்கள் (1) என். ஸ்ரீஸ்கந்தராஜா (11) பீ எழில் இளங்கதிர்.

## ரயில்வேப்பகுதி எச்சரிக்கை

(கோண்டா வில்)

கோண்டாவில் ரயில்நிலைய வளவுக்குள் இருக்கும் பனை மரங்களில் சட்டவிரோதமான முறையில் கள் சீவுவோர் உடனடியாக நிறுத்தாவிட்டால் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள் என்று ரயில்வே பகுதியால் எச்சரிக்கை செய்யப் பட்டுள்ளது.

மேற்படி நிலையத்துக்கு சொந்த மான இந்த வளவில் முப்பதுக்கு மேற்பட்ட மரங்களில் கள் சீவப்பட்டு வருகின்றது. இதனால் ரயில் பயணிகளும் பல அசௌகரியங்களை எதிர் நோக்குவதாக கூறப்படுகின்றது. (4.1)

## தொண்டர் ஆசிரியர் கூட்டம்

நல்லூர் தொகுதியில் வசிக்கும் சகல தொண்டர் ஆசிரியர்களையும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கல்வியங்காடு ஸ்ரார் பியூப்பிள் அக்கடமியில் தவறாது சமுகமளிக்கும்படி தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (கி)

## தபாலதிபர் நியமனம்

அனலைதீவு தபாலகத்தின் தபாலதிபர் வெற்றிடம் தற்போது நிரப்பப்பட்டுள்ளது நீண்டகாலமாக இங்கு தபாலதிபர் ஒருவர் நியமிக்கப்படாதிருந்தார்.வேலணை பிரதம தபால்க் கந்தோரில் உதவித்தபாலதிபராக கடமையாற்றிய திரு. க.நவரத்தினம் அனலைதீவு தபாலகத்தின் புதிய தபாலதிபராக பதவி உயர்த்தப்பட்டு கடமையாற்றிவருகின்றார். (24)

## முரசொலிக்கு வந்த கடிதம்

### தண்ணீர்! தண்ணீர்! தண்ணீர்! அது இங்கு மட்டும் ஏன் இல்லை?

ஆசிரியர்
முரசொலி

யாழ் மாவட்டத்தில் பிரபலமான யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நீரற்ற வரண்ட நிலை ஏன்? அங்கு குடிப்பதற்குக் கூட மாணவருக்கு போதியளவு நீர் கிடைப்பதில்லை.

ஒன்றிற்கு மேற்பட்ட கிணறுகளை, வசதிக்கட்டண நிதியிலாவது கட்டாமல் அத்தியாவசியமான இந்த தண்ணீர் குழந்தைகளுக்குத் தேவையான அளவு கிடைக்க வசதி செய்யாமல் ஏன் இந்தக் கெடுபிடி? இரக்கமற்ற உள்ளம் எமது குழந்தைகளின் வழிகாட்டிகளான ஆசிரியர் பெருந்தகைமார்களுக்கு.

ஒருவராவது துணிந்து இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்காது பிள்ளைகளை காய்நத கையுடனும் காய்ந்த வயிறுடனும் விரட்டுவது ஏன்? தாராளமாக நீர் குழாய்களில் வர வழி செய்தால் விரைவில் மாணவர்களும் கைகளைக் கழுவி நீரை அருந்தி குறித்த இடைவேளைக்குள் தங்கள் கடமைகளை சரிவர செய்து முடிப்பார்களே!

அதை விடுத்து நீண்டகியூ கியூ முடிவதற்குள் ஆரம்பமணி பின் விரட்டல்! மிரட்டல்! காய்ந்த கையைப் பேப்பரில் துடைத்து விட்டு அந்தப் பேப்பரை பையினுள் சுருட்டிக் கொண்டு வீட்டிற்கு வரண்ட தொண்டையுடன் களைத்து வரும் நிலை ஏன்? இவ்வினாவிற்கு விடையை விரைந்து செயலில் காட்டுவார்களா?

கோப்பாய் திருமதி. எஸ்.ஜெயகிருஷ்ணா

### வெள்ளை உடை அண்ணாமாரின் உள்ளமும் வெள்ளைதானாம்

ஆசிரியர்
முரசொலி

கடந்த 22ம் திகதி 'முரசொலிக்கு வந்த கடிதம்' பகுதியில் தென்மராட்சி மாணவிகள் எழுதிய 'வெள்ளை உடை அண்ணா மாரே உங்கள் உள்ளமும் வெள்ளையாகுமா? என்ற கடிதம் பிரசுரமாகியிருந்தது.

உண்மையில் நடந்தது இதுவே—17ம் திகதி மாலை 5 மணிவரை கொடிகாமத்திற்கான 769 இலக்க பாடசாலை பஸ் வராததால் அப்பொழுது அங்கு வந்த ஆ்பியவளை பஸ்ஸிற்கு கைகாட்டினோம்— ஆனால் அது நிற்காது சென்றுவிட்டது. அப்பொழுது பஸ்ஸிற்குள் இநந்த மாணவிகள் ஜன்னலால் தலையை வெளியே நீட்டி எமக்கு'வலிக்ஸ்' காட்டி கேலி செய்தனர்.

இப்படி அவர்கள் நடந்தும் மாணவராகிய நாம் புத்தகங்களை எறிந்தோ அல்லது உடல் ரீதியாகவோ மாணவிகளைப் பழிவாங்கவில்லை. நிலைமை இப்படியிருக்க ஒரு சில மாணவிகள் எழுதிய இக்கடிதம் எமக்கு வேதனை தருகிறது.

எமது நிலையை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். நாம் பஸ்ஸில் தவறாக நடந்து கொள்ளவில்லை என்பதை சில மாணவிகளின் கையொப்பங்களின் மூலம் இங்கு உறுதிப் படுத்தப்படுததியுள்ளோம்.

தென்மராட்சி —சகோதர மாணவர்கள்.

(இக்கடிதத்தில் 10 மாணவர்களினதும், 24 மாணவிகளினதும் ஒப்பங்கள் இடப்பட்டுள்ளன.)

இன்று முதல்

## தென்மராட்சி தனிக்கோட்டம்; சாவகச்சேரியில் புதிய அலுவலகம்

(நாவற்குழி)

இதுவரை காலமும் யாழ்ப்பாணக் கோட்டக் கல்வி அலுவலகத்துடன் இணைந்திருந்த தென்மராட்சிப் பகுதி இன்று 4-ம் திகதிமுதல் தனிக் கோட்டமாக இயங் கவிருக்கிறது.

இப் புதிய தென்மராட்சிக் கோட்டக் கல்வி அலுவலகம் இன்று யாழ்மாவட்ட கல்விப் பணிப்பாளர் இரா சுந்தரலிங்கத்தினால் திறந்து வைக்கப் படும்.

இக் கோட்டக் கல்வி அலுவலகத்தின் புதிய உதவிக் கல்விப் பணிப்பாளராக தனஞ்சயன் நியமிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரித் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நவரத்தினத்தின் இல்லத்தில் திறக்கப்பட இருக்கும் இவ்வலுவலகத் திறப்பு விழாவிற்கென ஏ. பி. சிதர பாடசாலை அதிபர்களிடமிருந்து100 ரூபாவும்,ஏனைய அதிபர்களிடமிருந்து ரூபா 50-ம் ஆசிரியர்களிடமிருந்து 25 ரூபாவும் கோரி விழாக்குழுவினர் தென்மராட்சிப் பாடசாலைகளுக்கு படிவங்களை அனுப்பியுள்ளார். (ப-5)

நவாலி வித்தியாசாலை

## திருத்த வேலைகளுக்கென ஆசிய அபிவிருத்திவங்கி உதவி

கடந்த வன்செயல்களின் போது பலத்த சேதமடைந்த நவாலி அட்டகிரி சைவ வித்யாசாலையின் திருத்த வேலைகளுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி யாழ் கல்வித்திணைக்களத்திற்கு ஊடாக ஒரு லட்சம்ரூபாவை வழங்கியுள்ளது.

இந்த நிதியைக் கொண்டு கடந்தகால அசம்பாவித சம்பவங்களின் போது ஷெல் தாக்குதலினால் பலத்த சேதமடைந்த பாடசாலையின் கட்டிடங்கள் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாகத்தெரிவிக்கப்படுகின்றது. (13)

## வாழ்த்துகின்றோம்



இன்சொல் இனிதோம்பல் ஏய்ந்த குணமறிவு
நன்காற்றும் பண்பு நலங்கனிந்த — பொன்போன்ற
யாழ். கல்வித்திணைக்களம் சேர் கிருபாகரன்
ஆரிழை கோகிலா வொடு
தேசுமிக வாழ்க செழித்து

வள்ளுவனும் வாசுகியும் வாய்பொத்தி நாணிடவே
தெள்ளுதமிழ்ச் செல்வங்களே தேன்பாலில் கலந்தது
-போல்
கள்ளங் கபடின்றிக் காதலித்து வாழ்வமைத்து
இல்லத் திருத்தி இறைவன் தனைவேண்டி
இல்லையென் றிரப்போற்கு இல்லையெனா தீந்து
ஈறுதனைக் காட்டி இளநல் நகை புரியும்
பூந்தளிர்ப் பாலகரைப் பூமிக்களித்துயர்வாய்
நாட்டிற்கு நல்லபணி நல்கிடவே வாழ்த்துகின்றோம்.

—இன்று (04. 06. 1990) மணவாழ்வு காணும் கிருபாகரன் - கோகிலா தம்பதிகளை வாழ்த்தும் சூரியா பார்மஸி அதிபர் துரையண்ணா, மற்றும் ஊழியர்கள் குணம் அண்ணா, உமா, ராதா, மகேஸ் கோபி ஆகியோர்.

06016

## காணவில்லை

### அம்பிகா! எங்கள் அருமை ஈஸ்வரியே!

நீ அளவெட்டியிலிருந்து 27-05-90 சென்ற ஞாயிறு காலை புறப்பட்டு இவ் அறிவிப்பு உன்பெற்றோரிடமிருந்து 11520 நிமிடங்கள் கழிந்து தமிழீழத்திலுள்ள எல்லாப் பத்திரிகைகளிலும் பிரசுரமாகிறது. உனது இலட்சியத்திற்கு நீ இதுவரை எடுத்த பிரயத்தனங்களின் பெறுபேறு எதுவானாலும் அவற்றுடன் விரைந்து அதுவும் மிக மிக விரைந்து எம்முன்னிலையில் எம் கண் முன்னே வருவாய் என்று நம்பித்தவிக்கின்றோம். உனது வரவை வழிமேல் விழிவைத்தபடி தவித்துக்கொண்டிருக்கும் உன் வீட்டு வாசல் எந்நேரமும் திறந்திருக்கும். கடன் தருபவர் இனியாவது...?

''கந்தன் அகம்'' — கமலாம்பிகை ஆறுமுகம்
29, திருநகர், கிளிநொச்சி. — அன்பு ஐயா, அம்மா

06026


NEW MASTER INSTITUTE

B. M. C. Lane — JAFFNA

PHYSICS - A/L 90

நந்தகுமார்

MON — FRI — 10. 00—11. 00 A. M

பொறியியல் (MECHANICS)

01. 00 — 02. 00 P. M

ஈர்ப்புப்புலம் (GRAVITATION)

ஆரம்பம்:-05. 06. 90 செவ்வாய்க்கிழமை நடைபெறுகின்ற வகுப்புகள்.

11. 00 - 12. 00 — வெப்பவியல்
1. 00 - 2. 00 — மின்காந்தவியல்

06015


### மேஜர் சலாம் நினைவுதினத்தில் வாஞ்சிநாதன் உரை:

# சில இளைஞர்கள் போராட மற்றவர்கள் சுகவாழ்வு: இந்தநிலை இங்கு மாறினால் ஈழம் தூரத்திலில்லை

''போராட்டம் என்பது ஒரு சில இளைஞர்களுக்கு மட்டும் உரியதல்ல, சிறுவர் முதல், முதியோர்வரை தமது சுய நலங்களைச் சிறிதுகாலம் ஒதுக்கி வைத்துவிட்டு, எம்மோடு இணைந்து போராடினால், ''ஈழம்'' வெகு தூரத்தில் இல்லை......''

உடுப்பிட்டிப் பிரதேசம், இமையாணன் என்ற கிராமத்தில் அண்மையில் நடைபெற்ற மேஜர் சலாமின் இரண்டாவது நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் கவிஞரும், ''விடுதலைப் புலிகள்'' ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவருமான, மு. வே. யோ. வாஞ்சிநாதன் இப்படிக் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:- 'ஒரு சில இளைஞர்கள் 'தமிழ் ஈழம்' பெற்றுத்தருவார்கள்... நாம் எமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பலாம்.. சுகமாக வீட்டில் வைத்திருக்கலாம். அல்லது அவர்களுக்கு நல்ல வேலைகளைப் பெற்றுக் கொடுக்கலாம், என்ற கனவுகளில் தான் இன்னும் சில பெற்றோர்கள் மிதக்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டும்... இது நமது மண்... இதை நமது பிள்ளைகள் எல்லோருமே போராடிப் பெறவேண்டும் என்று ஒட்டு மொத்தமாக எல்லாப் பெற்றோர்களும் என்று நினைக்கிறார்களோ, அன்றுதான் இம் மண் விடிவு பெறும் '

அரசு எம்முடன் மோதி ஏற்கனவே சூடு கண்டிருக்கிறது.''சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது'...என்ற பழமொழியை அது புரிந்து வைத்திருக்கிறது. ஆகவே, மீண்டும் ஒருமுறை எம்முடன் மோதுவதைத் தவிர்த்துப் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும் இச் சூழ்நிலையில் உருப்படியான நடவடிக்கைகளை எடுத்து எமது தமிழ் பேசும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க ஸ்ரீ லங்கா அரசு முன்வர வேண்டும் .. இல்லையேல் இம் மண்ணில் போர் மேகங்கள் ஓய்வதற்கு வெகு காலம் பிடிக்கும் ..''எனஅங்கு தொடர்ந்து உரையாற்றிய வாஞ்சிநாதன், கூறினார். மேற்படி கூட்டத்தில் குணம் உட்பட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்களில் பலர் உரையாற்றினர். (கி)

## மேமாத வாழ்க்கைச் சுட்டெண்

மே மாத வாழ்க்கைச் சுட்டெண் 994. 5 என குடிசனத் தொகை மதிப்புத் திணைக்களம் அறிவித்துள்ளது. (7.சி)

### காக்கைதீவில் . . .

துள்ளது. இக்குடியேற்றத்திட்டம் அரசால் அமைக்கப்பட்ட பொழுதும் வீடுகளுக்கிடையிலான பரப்பு குறைவாக இருப்பதனால் இங்கு உயர்வான குடிசன அடர்த்தி காணப்படுகிறது. இக்குடியிருப்புக்குத் தெற்கே சோலைபுரம் குடியிருப்பு காணப்படுகிறது.

இப்பகுதிகளில் அடிப்படை வசதிகள் மிகக்குறைவாக உள்ளன. பண்ணைப் பொலிஸ் வீதிக்குப் பின்னால் அமைந்துள்ள பழைய மீனாட்சிபுரக் கிராமம் அண்மைக் கால அசம்பாவிதங்களினால் பெரும் அழிவு நிலைக்கு உட்படடு இன்று மீளமைக்கப்படுகிறது. இம் மீளமைப்பு முயற்சியில் தொண்டர் நிறுவனங்கள் பல பங்குகொண்டுள்ளன. இக்குடியிருப்பில் ஏற்கனவே உள்ள மக்களுடன் புதிதாக மார்புநோய் சிகிச்சை நிலையம், விளையாட்டு மைதானம் அமைந்த இடங்களில் புதிதாகக் குடிசைகள் அமைத்துப் பலர் குடியேறி நெருக்கடி மிக்க பல

பண்ணைக்கும் அலுப்பாந்திக்கும் இடைப்பட்ட பகுதி இராணுவப் பாதுகாப்புப் பகுதியாக இருந்ததால் கரையோரப் பாதை பொதுமக்களால் பயன்படுத்தப்படாமல் விடப்பட்டிருந்தது. மாநகர சபையை அண்டிய பிரதேசங்களில் ஏற்பட்ட இடிபாடுகள் காரணமாக இங்கு குடியேற்றங்கள் நிகழவில்லை. எனினும், அண்மையில் புதிதாகப் பலகுடில்கள் அமைக்கப்பட்டு வருவதனை இங்கு அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

அலுப்பாந்தி றெக்கிளமேசன் பிரதேசங்களில் மக்களின் தொகை அதிகரிப்பினால் குடியேற்றத்திட்ட நிலையிலிருந்துநெருக்கடியான குடியிருப்புப் பிரதேசமாக மாறியுள்ளது. காணிகள் துண்டாடப்பட்டும், முன்னர் அமைக்கப்பட்ட வீடுகளுக்கு இணைப்புகளும் நீட்சிகளும் அமைக்கப்பட்டதனால் உயர் குடிசன அடர்த்திப் பிரதேசமாக மாறி சேரிப்பண்பைப் பெற்று வருகிறது.

றெக்கிளமேசன் பகுதிக்குக் கிழக்காக அமைந்த தொடர் மாடிகள் பல வசதிக் குறைவுகளைக் கொண்டிருப்பதுடன் அங்கு வாழும் மக்களின் சமூக பொருளாதார தொழில் பின்னணிக்கு ஏற்ப வீடுகள் அமையாததால் வீடுகளில் வாழும் மக்கள் பல வசதிக் குறைவுகளுக்குட்பட்டு இருப்பது பெரும் குறைபாடாகக் காணப்படுகிறது, குருநகருக்கும், பாசையூருக்கும் இடைப்பட்ட கரையோரப் பகுதியில் நிலமீட்சி. வீடமைப்பு நடவடிக்கைகள் ஒழுங்கற்ற முறையில் மும்முரமாக இடம்பெற்று வருவது கவனிக்கத்தக்கது.

ஹோலிகுறொஸ் ஆஸ்பத்திரிக்கு முன்னால் சிறுபகுதி தவிர ஏனைய பிரதேசம் முழுவதும் குடியிருப்பு நடவடிக்கைக்கு உட்பட்டு இருப்பதைக் காணலாம். பாசையூரிற்கும் கொழும்புத்துறைக்கும் இடையில் மகேந்திரபுரம், எழிலூர் ஆகிய இருகுடியிருப்புக்கள் அமைக்கப்பட்டுள்ளன கொழும்புத்துறைக்குஅப்பால் வசந்தபுரம், உதயபுரம், மணியந் தோட்டத்தில் அமைந்துள்ள மணிப்புரிக் குடியேற்றம் இதற்குத் தெற்கே அமைந்துள்ள பூம்புகார் ஆகியன அண்மையில் ஏற்படுத்தப்பட்ட குடியிருப்புகளாக உள்ளன.

கொழும்புத்துறைக்குக் கிழக்கே புதிதாக அமைந்துள்ள நான்கு குடியிருப்புகளும் மணல் பிரதேசத்தில் அமைந்துள்ளதுடன் அரசால் காணிகள் கொடுக்கப்பட்டும் சிறுதொகை வீடுகளும் கட்டிக் கொடுக்கப் பட்டுள்ளன.

மணிப்புரி, பூம்புகார் குடியேற்றம் நிலச்சீர்திருத்தத்தில் கிடைத்த காணிகள் பங்கிட்டுக் கொடுத்ததன் மூலம் உருவாக்கப்பட்டது.இக் குடியிருப்புக்கள் அமைந்துள்ள இடம் உயரமான மணல் பிரதேசமாக இருப்பதால் ஏனைய குடியிருப்புகள் எதிர்நோக்கும் வெள்ளம், குடிநீர் பிரச்சனை இங்கு குறைவாக இருக்கின்றன.

ஆனாலும் போக்குவரத்து குறைவாகவும்பாடசாலைகள் இல்லாததால் இக் குடியிருப்புப் பிள்ளைகள் அரியாலை மேற்கு கொழும்புத்துறைப் பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டியுள்ளனர்.

இக்கரையோரக் குடியிருப்புக்களில் காணப்படும் சமூக— பொருளாதாரநிலைமைகளை தொகுத்து நோக்கும் போது இங்கு வாழ்வோர் அன்றாடம் உழைத்து வாழ்க்கை நடத்தும் இயல்பு கொண்டோராக்வுள்ளனர். இவர்களது குடியிருப்புக்களில் பலவசதியீனங்கள் குறிப்பாக வீடுகள் சிறியனவாகவும், வசதி குறைவாகவும் உள்ளன. குடிநீர் வசதி பெறமுடியாமலும்,மின்சாரம் பல குடியிருப்புக்களில் இல்லாமலும் இருப்பதுடன் சுகாதார வசதி குறைவான காரணத்தால் பல பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றனர்.

மேலும் இப்பகுதியில் வாழும் மக்கள் பல்வேறு சமூகப் பின்னணியில் குடியேறியதன் காரணமாக,பழைய கிராமங்களில் காணப்படும் சமூக ஒற்றுமையும், ஒழுங்கமைப்பும் இக் குடியிருப்புக்களில் குறைவாகவுள்ளன.

மேற்குறித்த கரையோரப் பிரதேசத்தில் வாழிட அபிவிருத்தி சமூகப் பொருளாதாரத் துறைகளில் அபிவிருத்தி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இப்பிரதேசத்தை ஒழுங்கான முறையில் விருத்தியாக்கி பெரிய யாழ்ப்பாண நகரத்துடன் இணைக்கவேண்டும். அவ்வாறு செய்யாதுவிடின் சமூக ரீதியில் பின்தங்கி ஒதுக்கப்பட்ட பரப்பாக இது தொடர்ந்தும் செல்லும் நிலை ஏற்படலாம். இதனால் சேரி அடாத்துக் குடியிருப்புக்களின் பண்புகள் இக்கரையோரப் பிரதேசத்தில் மேலும் வளர்ச்சியடைவதுடன் இவை நகரப் பொருளாதாரத்தை பாதிப்பதுடன் நகரின் சுகாதாரம் சூழல் வீழ்ச்சியடையவும், குற்ற நிகழ்வுகள் அதிகரிக்கக் கூடிய நிலைகள் ஏற்படலாம்,

மேலும் கரையோரப்பகுதி அசுத்தமாக்கப் படுவதாலும் கடற்கரை மறைக்கப்படுவதாலும் நகர மக்கள் கடற்கரையோரத்தைப்பொழுதுபோக்குக்குப்பெற முடியாதுபோகலாம்.ஏற்கனவே இந்நிலை ஏற்பட்டுவிட்டது ஆகவே கரையோரப் பிரதேசத்தை விருத்தியாக்க சம்பந்தப்பட்ட உள்ளூராட்சிச் சபைகள் கூடிய கவனம் செலுத்துவதுநல்லதாகும்.(கி)


ஆண் உதவித் தாதியர்

பயிற்சிநெறி

TRAINING FOR NURSE - AIDE (MALE)

ஆண்களுக்கான உதவித் தாதியர் பயிற்சிநெறி 10. 6. 1990-ல் ஆரம்பமாகவுள்ளது.

பதிவுகட்கு:

Dr. V. P சுந்தரராஜன்
சாயிமெடிக்கல் அக்கடமி
இல. 10 பருத்தித்துறை வீதி
யாழ்ப்பாணம்

06034

# திறந்த பல்கலைக்கழகத்தில் மூன்று புதிய பயிற்சி நெறிகள்

இலங்கை திறந்த பல்கலைக் கழகம் தொழில்துறையில் உள்ளோரின் வசதிகருதி மூன்று புதிய பயிற்சி நெறிகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

விஞ்ஞானமாணிப் பட்டம் தொழிலுரிமைத்துவமும் சிறுவாணிக முகாமைத்துவமும், தொழில் நுட்பவியலும் முகாமைத்துவமும் ஆகிய மூன்று பயிற்சிநெறிகளுமே புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள பயிற்சி நெறிகளாகும்,

இப்பயிற்சி நெறிகளை மேற்கொள்ள விரும்புவோர் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன் நுகேகொட நாவலையிலுள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக பொதுத் தொடர்பு செய்தித்தொடர்பு உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம் அல்லது யாழ்ப்பாணம் உட்பட 16 மாவட்டங்களிலுள்ள இலங்கை திறந்த பல்கலைக் கழகங்களுடனும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது,(50கி)

# ஆசிரியர் தொலைக்கல்வி பயிற்சி நேர்முகப் பரீட்சை 10-ம் திகதி

தொலைக் கல்வி மூலம் பயிற்சி பெற விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 10-ம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள யாழ் மாவட்டத் தொலைக்கல்விப் பிரிவு அலுவலகத்தில் நடைபெறவிருக்கிறது.

வர்த்தமானியில் குறிப்பிட்ட முடிவு திகதிக்குப் பின்னர் ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவங்களுக்குரிய விண்ணப்பதாரிகளுக்கே இந்த நேர்முகப்பரீட்சை நடைபெறுவதாகவும், இதுவரை விண்ணப்பிக்காமல் இருப்பவர்கள் இம்மாதம் 9-ம் திகதி காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள தொலைக்கல்வி அலுவலகத்தோடு நேரில் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தொலைக்கல்விப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் தெரிவித்தார். (ப-5கி)

# வவுனியாவில் கூட்டுறவு பயிற்சி; 15-ம்திகதிவரை விண்ணப்பிக்கலாம்

வவுனியா மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் சங்கப் பணியாளர்களிடமிருந்தும், தனிப்பட்ட மாணவர்களிடமிருந்தும் கோரப்பட்டுள்ளது.

6 மாத காலப் பயிற்சி இதுவாகும். விண்ணப்ப முடிவு இம்மாதம் 15-ம் திகதியாகும் என மாவட்ட கூட்டுறவுச் செயலாளர் எஸ். புவனேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை வவுனியா கூட்டுறவுச் சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.(11கி)

மருதனாமடம்

# தாவரவியல் பூங்காவில் மூலிகைச் செடிகள்

மருதனாமடம் கோட்டப் பாடசாலைகளுக்கான தாவரவியற் பூங்கா இராமநாதன் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு அருகிவரும் மூலிகைச் செடிகள் வளர்க்கப்பட்டு வருவதுடன் பயனுள்ள மரங்களும் நாட்டப்பட்டுள்ளன. அத்துடன் பாடசாலைப் பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு மரங்களுக்கும் தாவரவியற் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

இத்தாவரவியற் பூங்காவைப் பராமரிக்க வசதியாக ஒரு தொட்டியொன்றை மில்க்வைற் தொழிலதிபர் கட்டிக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளதுடன் பல பயனுள்ள மரக்கன்றுகளையும் வழங்கியுள்ளார். (ப- 2கி)

### சேதமடைந்த ..

மறுத்துள்ளது.

இந்து காலாசார அமைச்சுக்கு வழங்கப்படும் 60 இலட்சம் ரூபா அமைச்சின் சம்பளம் போன்ற செலவுகளை ஈடு செய்யவே போதுமானதாக உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7 கி)

### புனர் வாழ்வு ..

மேலும் அதற்கான நிதி உதவியை வழங்க சர்வதேச அபிவிருத்தி சங்கம் (ஐடா) முன்வந்துள்ளது.

இதனையடுத்து முல்லைத்தீவில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் முக்கிய வேலைத் திட்டம் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை ஒன்று 'ஐடா' விடம் சமர்ப்பிக்கப் படவுள்ளது. (7கி)

### விடுதலைப்...

துவதன் மூலம் பரஸ்பரம் புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும் என பாதுகாப்பு வட்டாரங்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதன் ஒரு கட்டமாகவே விடுதலைப்புலிகள் சார்பில் திரு. அன்ரன் பாலசிங்கம், யோகரட்ணம் யோகி ஆகியோர் ஜனாப் ஏ.ஸி.எஸ். ஹமீத்துடன் இன்று கிழக்கு மாகாணத்திற்கு விஜயஞ் செய்யவுள்ளனர்.


## காலமானார்

### பிரம்மஸ்ரீ ச. சுப்பையாக் குருக்கள்

சுழிபுரம் குடியிருப்பைச் சேர்ந்தவரும், பொன்னாலை கிருஷ்ணன் கோயில் அர்ச்சகருமான பிரம்மஸ்ரீ சபாபதிக்குருக்கள் சுப்பையாக் குருக்கள் நேற்று முன்தினம் இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஈமக்கிரியைகள் உடுவிலில் நேற்று நடைபெற்றன.

06032


யாழ் பல்கலைக் கழக

# கிளி. விவசாய பீடத்திற்கு 48 ஏக்கர் வயற் காணி

யாழ் பல்கலைக் கழகத்திற்கூடாகக் கிளிநொச்சியில் செப்ரெம்பர் மாதம் முதல் இயங்க இருக்கும் விவசாய பீடத்திற்கென மேலும் நாற்பத்தெட்டு ஏக்கர் காணி நன்கொடையாகப் பெறப்படவுள்ளது.

பரிபாலன சபையானது சேர். பொன். இராமநாதனுக்குச் சொந்தமாக இருக்கும் வயற் காணிகளில் ஒரு பகுதியைஅதாவதுநாற்பத்தெட்டு ஏக்கர் காணியை விவசாய பீடத்திற்கென இம் மாதம் பதினெட்டாம் திகதி யாழ் பல்கலைக்கழகத்திற்குக் கையளிக்க இருக்கிறது. இந்தக் காணியில் யாழ் பல்கலைக்கழகம் விவசாயப் பீடத்தினை நிறுவுவதுடன் இதன் ஒரு பகுதியை ''நெல் ஆராய்ச்சிப் பண்ணையாக'' உபயோகப்படுத்துவர். இந்தக் காணியானது இரண்டுபோகமும் பயிர் செய்யக்கூடிய விளை நிலமாகும். இரணைமடுக் குளத்திலிருந்து நீர்ப்பாசன வசதி இக்காணிக்குண்டு இக்காணியைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதன் மூலம் நல்ல ஒரு வருமானத்தை விவசாயப்பீடம் பெறக்கூடியதாக இருப்பதுடன் கல்வி வளர்ச்சிக்கும், யாழ் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக்கும் சிறந்த ஒரு வழிகாட்டியாகவும் அமையும்.

காணிக்கையளிப்பானது எதிர்வரும் பதினெட்டாம் திகதியன்று வைபவ ரீதியாக பல்கலைக் கழக துணைவேந்தரிடமும், பதிவாளரிடமும் கையளிக்கப்பட இருக்கிறது. (4)

# மாணவர் சுயவிபரக்கோவை தயாரிக்கப் பணிப்புரை

மருதனாமடம் கோட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் ஏறத்தாள 35,000 மாணவர்களது சுய விபரக் கோவைகளையும் தயாரிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் இவற்றை உபயோகிக்க வேண்டுமென இப்பகுதியிலுள்ள 105 பாடசாலைகளின் அதிபர்களையும் மருதனாமடம் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க. குலசேகரன் பணித்துள்ளார்.

### 66விளையாட்டு

அமைச்சில் கடமை புரியும் சிரேஸ்ட உயர் அதிகாரி ஒருவர்,

வலைப்பந்தாட்டம், கூடைப் பந்தாட்டம், கரப்பந்தாட்டம், மெய்வல்லுநர் பயிற்சிகளுக்கு பயிற்சிப்போதனாசிரியர்கள் இருக்கவேண்டும் ஆனால் போதனாசிரியர்கள் இல்லை எனவும் அவர் தெரிவித்தார் (11-கி)

### யாழ் பல்கலைக் ..

அவர்களே இவ் உபகரணங்களை பொருத்தி தீயணைக்கும் பிரிவை உருவாக்குவார்கள்.

யாழ் பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு கட்டிடங்களுக்கும் இத்தீயணைக்கும் கருவிகள் இணைக்கப்பட உள்ளது. இதற்கென நான்கு இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. முதலில் நூற்றிப்பதினைந்து கருவிகளை இணைப்பதற்கே ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. (4.கி)

### கிளிநொச்சி...

வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி,யாழ், மாவட்டங்களில் அரசாங்க அதிபர்களின் ஆலோசனையுடனும் அவ்வப்பகுதி உதவி அரசாங்க அதிபர்களின் உதவியுடனுமே இப் புனர்வாழ்வு உதவிகளுக்குரிய குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு நடைமுறைப் படுத்தப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

வீடுகள் முழுமையாகச் சேதமடைந்த குடும்பங்களுக்கே இத்திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

### மின் தடையை ..

பட்டு வந்தது.

இதைத்தவிர்ப்பதன் பொருட்டே மூன்று ஜெனரேட்ரர்களை வாங்க தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இதற்கான நிதியை பல்கலைக்கழக மானியக்குழு ஒதுக்கியிருப்பதாகவும், இந்த ஜெனரேற்றர்கள் ஒவ்வொன்றும் 25KV மினை உற்பத்தி செய்யும் எனவும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் ஜெனரேற்றர்களை இயங்க வைப்பதற்கான டீசலை சேகரித்து வைப்பது பற்றியும் ஆலோசிக்கப் பட்டுள்ளது. (4கி)

### மாகாண ..

கப்பட்டது.

பேச்சுகள் மூன்று மணி நேரம் நடைபெற்றதாகவும் சுமுகமான முறையில் அவை அமைந்ததாகவும் தெரிவிக்கப் பட்டது.

புலிகளின் தரப்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் யோகரட்ணம் யோகியும் கலந்து கொண்டனர். அரச தரப்பில் நீதியமைச்சர் ஜனாப் ஏ.சி. எஸ். ஹமீட்டுடன் பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் எயர் மார்ஷல் வால்டர் பெனான்டோ ராணுவ தளபதி ஹமில்டன் வணசிங்க விமானப்படை தளபதி' எயர்வைஷ் மார்ஷல் குணவர்தன கடற்படைத் தளபதி ஆனந்த சில்வா பொலிஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா ஆகியோர்பேச்சுகளில் கலந்து கொண்டனர்.


## UNIKCO COMPUTER CENTRE

★ புதிய கம்பியூட்டர் வகுப்புக்கள் ★

★ dBASE III Plus
ஆரம்பம் 7 - 6 - 90 காலை 10.00 மணி

★ LOTUS 1-2-3.
ஆரம்பம் 07 - 06 - 90 காலை 9.00 மணி

★ WORD PROCESSING
ஆரம்பம் 09 - 06 - 90 மாலை 4.00 மணி




**Unikco Computer Centre**

No. 5, 2nd Lane, Power House Road,
JAFFNA

JOIN WITH US TO STUDY THE LATEST COMPUTER TECHNOLOGY

06033


இ[illegible]த்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 6[illegible] இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 04.06.1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது